
www.padippakam.com

# சங்கமம்
# SANGAMAM

இதழ் 19
01
மார்கழி
1992

14/1/93



Nr. 19
01
Dec.
1992

**DANSK-TAMILSK VENSKABSFORENING**
**டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றியம்**

படிப்பகம்

www.padippakam.com




# சங்கமம்

வெளியிடுபவர்கள் :
**டெனிஸ் தமிழ்**
**தோழமை ஒன்றியம்**
பத்திரிகைப் பொறுப்பாளர்:
ற்ரோல்ஸ் ஜோஹன்சன்

உதவியாளார்கள் :
மேற்றி ஜெயரெட்ணம்
து. அசோகன்
எம். எஸ். கந்தசாமி
சிந்து டேவிட்
டேவிட் ஜோர்ஜ்
எம். சண்
து. செல்வக்குமார்
அறிவு நிறுவனங்களுக்கு
**சந்தா 50 Kr.**
கணணித் தொகுப்பு-வடிவமைப்பு
நாவலன் பதிப்பகம்

## SANGAMAM

**Udgiver:**
**DANSK-TAMILSK**
**VENSKABSFORENING**
**Redaktion:**
Troels Johansen (Ansv.)
**Redaktionhjælp**
Metty Jeyaratnam
T. Ashokan
M. S. Kanthasamy
Sinthu David
David George
M. Shan
T. Selvakumar
ISSN 0305-6246
**Institutionsabnonoment:**
Kr. 50
Sats og Lay-out
Navalan Pathipphakam


## Indhold
## உள்ளடக்கம்


**Det politiske........**

டென்மார்க்கில் அரசியல்....

**Herning kommune**
ஹேர்ணிங் கொமுன்.....

**Amnesty**
மனித உரிமைகள் சங்க...

விடுகதை

தமிழ் மொழிக் கல்வியும்...

பலதரப்பட்ட கலாச்சாரமும்...
**Multikulturel åbenhed....**

**Midt i byen.....**
நகரத்தின் மத்தியில்....

கே. எஸ் துரை ....

நாங்களும் எழுதுவோம்...

கவிக்குயில்கள்

கவிதையினதும்.....

குடியேற்றம்

டென்மார்க்கில்

முல்லையூரான்....

www.padippakam.com



# DET POLITISKE LIV I DANMARK

Så oplevede vi det endnu engang!
Endnu engang fik befolkningen at vide, at den såkaldte **"tamil-rapport"** ville blive forsinket. Først efter jul og nytår vil rapporten blive offentliggjort. Først til den tid vil den samlede vurdering af hele tamil-sagen blive lagt frem for befolkningen.
Alle ved, at tamil-rapporten kan indeholde meget belastende oplysninger om regeringens handlemåde; noget er allerede kommet frem gennem de mange retsmøder, vi har kunne læse om eller set i TV. Embedsmænd i Justitsministeriet har sået en dyb mistillid til skiftende justitsministre og til topembedsmænd. Det har rystet mange af os, fordi det må være sådan i et demokratisk samfund som det danske, at netop Justitsministeriet skal være ukrænkeligt.
Hele det politiske liv afventer dommen over tamilforløbet.
På Christiansborg er det politiske arbejde gået i venteposition. Hvis materialet er for belastende mod statsminister Poul Schlüter, vil mange af os kræve, at han går af og udskriver valg.
Mens man venter på tamil-rapporten, har tre partier fundet sammen om løsning af store opgaver. Jeg tænker på det samarbejdet, som Socialdemokratiet, SF og De Radikalde har skabt om Danmarks forhold til Den Euripæiske Union.



படிப்பகம்

www.padippakam.com



Som alle sikkert ved, så sagde Danmark jo NEJ til den Europæiske Union ved afstemningen den 2. juni. Danmark sagde NEJ til et meget snævert politisk samarbejde, bl.a. fordi man er bange for, at demokratiet vil lide ved det.
Men Danmark sagde ikke NEJ til Europa - det er vigtigt at slå fast. Danmark er en del af Europa, vi vil gerne samarbejde, men vi vil ikke hovedkuls skubbes ind i et system, som ikke er demokratisk.
Det danske NEJ betyder i realiteten, at de øvrige europæiske lande ikke kan udføre den planlagte union, for det er nødvendigt, at alle medlemslandene er enige om det. Som I måske har bemærket, så vil Storbritannien afvente en ny folkeafstemning i Danmark; den kommer måske til maj.
Men regeringen altså ikke kunne finde en løsning på problemet, så udarbejdede Socialdemokratiet, SF og de Radikale det forslag, som man nu har vedtaget i Folketinget.
I virkeligheden er det flertallet uden om regeringen, som har magten. Det er en uholdbar situation i et demokratisk samfund, at partierne uden om regeringen fører landets politik.
Derfor håber vi, at tamil-rapporten snart må blive offentliggjort, så regeringens skæbne kan blive afgjort.
Vi må væbne os med tålmodighed - det bliver jul, og det bliver nytår først. Men så..........?

Troels Johansen



படிப்பகம்

www.padippakam.com

சங்கமம்

# டென்மார்க்கில் அரசியல் வாழ்க்கை

**நாம் இதில் இன்னுமோர் தடவை அனுபவப்பட்டுள்ளோம்.**

இச்செய்தி நத்தாருக்கும் புதுவருடத்திற்கும் பின்புதான் வெளியிடப்படும். முதன் முதலாக அந்நேரத்தில்தான் தமிழ்ப்பிரச்சனையில் சேகரிக்கப்பட்ட கருத்துக்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இவ் அறிக்கையானது அரசாங்கத்தினால் கையாளப்பட்ட முறையினைப் பற்றி மிகவும் கடுமையான தகவல்களைக் கொண்டிருக்க முடியும் என்பது எல்லோரும் அறிந்ததே; சில செய்திகள் பல தடவைகள் நீதிமன்றத்தில் நடைபெற்ற கூட்டங்களினூடாக ஏற்கனவே வெளிவந்துவிட்டன. அவற்றைப்பற்றி நாம் தொலைக் காட்சியில் பார்க்கக்கூடியதாகவும் பத்திரிகைகளில் வாசிக்கக் கூடியதாகவும் இருந்தது.

முன்னைய நீதியமைச்சரும், உயர் அதிகாரியும் நம்பிக்கைத் துரோககம் செய்தார்கள் என்று நீதி அமைச்சின் அதிகாரியால் காணக்கூடியதாக இருந்தது. அதுவும் நீதியமைச்சர் மீறக் கூடாததை மீறியுள்ளார் என்பது டெனிஸ் ஜனநாயக சமுதாயத்தை நடுங்க வைத்தது.

நீதிபதியின் தீர்ப்பை எல்லோரும் எதிர்பார்த்தபடியுள்ளார்கள். நாடாளு மன்றத்தில் கூட சில அரசியல் செயற்பாடுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றேதான் கூறவேண்டும். பிரதமர் போல் சுலூட்டருக்கு எதிராக இத்தீர்ப்பு இருக்குமாயின், புதிய தேர்தல் நடத்தும்படி பலரால் வேண்டப்படுவார். இவ்வறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்வேளையில் மூன்று கட்சிகள் இணைந்து, ஒரு பெரிய பிரச்சனைக்கு தீர்வு ஒன்றை முன்வைத்துள்ளனர். ஐரோப்பிய இணைப்பில் டென்மார்க்கின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்ற விடயத்தில் சோசலிச ஜனநாயகக் கட்சி, சோசலிச மக்கள் கட்சி, தீவிரவாதக் கட்சி என்பன இணைந்து செயல்பட்டு வருகின்றன.

1992-06-02ல் நடைபெற்ற பொதுமக்கள் வாக்கெடுப்பில் மக்கள் ஐரோப்பிய அரசியல் இணைப்பை ஏற்கவில்லை அடிப்படை ஜனநாயகத்திற்கு மாறான அரசியல் இணைப்பு ஐரோப்பாவில் ஏற்படுகின்ற காரணத்தினால்தான் மக்கள் ஏற்கவில்லை. ஆனால் மக்கள் ஐரோப்பிய ஒற்றுமையை வரவேற்கின்றார்கள். ஐரோப்பிய ஒற்றுமை என்ற கருத்து முக்கியமானதாகும். டென்மார்க் ஐரோப்பாவில் ஒரு பகுதி, ஒன்றிணைந்து செயல்பட வேண்டும், ஆனால் ஜனநாயகமற்ற அமைப்பு ஏற்க முடியாது. டெனிஸ் மக்கள் எதிர்த்ததினால், மற்றைய ஐரோப்பிய நாடுகள் ஐரோப் பிய இணைப்பைக் கொண்ட அமைப்பினை உருவாக்க முடியாது. ஆதலால், ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளும் இதனை ஏற்க வேண்டும். 1993 வைகாசி மாதத்தில் இன்னும் ஒரு பொது வாக்கெடுப்பு டென்மார்க்கில் இடம்பெறும் என்று பெரிய பிரித்தானியா எதிர்பார்க்கின்றது என்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அரசாங்கம் மேற்கூறிய மூன்று கட்சிகளுடனும் இணைந்து செயற்படாமல் எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாமல் இருக்கின்றது. ஆதலால் இக்கட்சிகளின் பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன் வைத்துள்ளது. ஆளும் கட்சிகளின் வாக்குகளைவிட எதிர்க்கட்சிகள் கூடியளவு வாக்குகளைக் கொண்ட

15ம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com



## PASNINGSTILBUD TIL BØRN I HERNING KOMMUNE

Alle, der bor i Herning kommune, ved vist godt, at det er vanskeligt at få passet børn. Aldrig tidligere er der blevet lavet så mange pladser til børn, men alligevel er ventelisterne for børn, der skal have et pasningstilbud, for lange. Det er der mange grunde til. En af grundene er, at fødselstallet er stærkt stigende igen efter mange års fald. Ligeledes ønsker forældre at få deres børn passet, fordi både mand og kone arbejder.

Det kan måske være vanskeligt at få et overblik over de forskellige pasningstilbud. Derfor skal jeg kort gøre rede for dem her.

Det er **socialudvalgets** opgave at løse disse opgaver. Vi kan tilbyde:

| | | |
|---|---|---|
| - dagpleje 32 timer/uge | 1.072.-kr | i 11 mdr. |
| - dagpleje fuldtid | 1.475.-kr | " |
| - vuggestue 0 - 2 år | 2.138.-kr | " |
| - 3 - 6 årige (aldersintegreret institution) | 1.098.-kr | " |
| - 7 - 13 årige | 1.001.-kr | " |
| - fritidsklub | 378.-kr | |

Før i tiden havde man børnehaver og fritidshjem i Herning kommune, men i disse år ændres det, så det bliver aldersintegrerede institutioner, hvor børn kan være fra



படிப்பகம்

www.padippakam.com



de er 3 år, til de bliver 13 år. Det er en fordel for søskende at kunne være på samme institution, ligesom det er nemmere for forældre at bringe og hente børnene morgen og aften, hvis de kun skal et sted hen.

Det er netop blevet vedtaget, at der ikke skal betales for 12 måneder om året, men kun for 11. Derfor er taksterne for 1993 som anført.

Eftersom der fødes mange børn i disse år, er der som nævnt lange ventelister til vuggestue og dagpleje. Derfor prøver byrådet til stadighed at etablere nye pladser, hvor det er muligt.

**Socialudvalget** arbejder sammen med **skoleudvalget** for at skabe nye pasningstilbud, bl.a. på skolerne i de timer, hvor der ikke er undervisning i lokalerne. Dise pasningstilbud kaldes **skolefritidsordninger.** For ganske kort tid siden blev det f.eks. besluttet i byrådet, at der skal oprettes 20 skolefritidspladser på Brændgårdskolen, fordi der er et stærkt ønske om at få passet børn i Herning by.

Hvis man som forældre til børn i Herning kommune ønsker at få oplysninger om, hvilke pasningstilbud, der findes, kan man kontakte **Daginstitutionskontoret** på Rådhuset. Hvis barnet allerede er i skole, kan man også kontakte **Skoleforvaltningen** for at høre om pasningsmuligheder i nærheden af, hvor man bor.

Troels Johansen



படிப்பகம்

www.padippakam.com

Sangamam

amnesty international

# SRI LANKA

NOTAT

27. oktober 1992

***AMNESTY INTERNATIONAL ER STADIG BEKYMRET OVER RISIKOEN VED AT SENDE TAMILSKE ASYLANSØGERE TILBAGE TIL SRI LANKA.***

Amnesty International er igennem længere tid blevet opsøgt af tamilske asylansøgere, der har udtrykt stor frygt for at blive udvist til Sri Lanka, - et land der i de sidste 10 år har været karakteriseret af etniske konflikter og vedvarende borgerkrig i den nordøstlige del, mellem LTTE (Liberation of Tamil Tigers Eelam) og de srilankanske regeringsstyrker.

Sri Lanka har også været skueplads for omfattende og grove brud på menneskerettighederne, både begået af myndighederne og de forskellige politiske organisationer. En nærmere beskrivelse af forholdene på Sri Lanka findes i nedenstående Amnesty rapporter.

Amnesty International er derfor blevet opfordret til at udtale sig om den nuværende situation for tamiler på Sri Lanka.

Amnesty Internationals danske afdeling har interviewet et større antal tamilske asylansøgere, der stammer fra den nordøstlige del af Sri Lanka. De udtrykker alle en udbredt frygt for forfølgelse og overgreb af LTTE (Liberation of Tamil Tigers Eelam), den største tamilske oppositionsgruppe, der er i væbnet konflikt med sikkerhedsstyrkerne i det nordøstlige Sri Lanka.

Alle asylansøgerne har oplyst, at de frygter at blive mistænkt af myndighederne for at være LTTE-sympatisører, og dermed blive udsat for forfølgelse, tilbageholdelse, "forsvindinger", tortur og henrettelse uden lov og dom, af sikkerhedsstyrkerne og/eller væbnede tamilske grupper som TELO (Tamil Eelam Liberation Organisation), PLOTE (Peoples Liberation Organisation of Tamil Eelam) og EPDP (Eelam Peoples Democratic Party). Disse grupper opererer sammen med sikkerhedsstyrkerne i de regeringskontrollerede områder, inkl. Colombo.

De tamilske asylansøgere frygter også at blive udsat for pengeafpresning, tvangsarbejde af farlig eller nedværdigende karakter, tortur og henrettelse fra LTTEs side, hvis de vender tilbage til et område under deres kontrol, uanset om de har haft forbindelse til LTTE eller ej.

Tamiler i Danmark har jævnligt overfor Amnesty International hævdet, at LTTE-sympatisører i Danmark videregiver oplysninger om tamiler, der står foran udvisning, til LTTE på Sri Lanka.

படிப்பகம்

Læs side 8

# கோர்ணிங் உள்ளூராட்சிப் பகுதியிலுள்ள பிள்ளைகளுக்கான பராமரிப்பு வாய்ப்புகள்

பிள்ளைகளை பராமரிப்பதற்கு இடம் எடுப்பது மிகவும் கடினமானது என்பது கோர்ணிங் உள்ளூராட்சிப் பகுதியிலுள்ள எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததே. முன்பு எப்போதுமே இதுபோன்று, பிள்ளைகளுக்கென பல பராமரிப்பு இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதில்லை, ஆனால் அப்படியிருந்தும்கூட, பிள்ளைகளுக்கான ஒரு பராமரிப்பிற்கு வாய்ப்பு கிடைக்கும் காலம் மிகவும் நீடித்துள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. அக்காரணங்களில் ஒன்று, பல வருடங்களின் பின்பு குழந்தைகள் பிறக்கும் எண்ணிக்கை மீண்டும் துரிதமாகவே கூடிக் கொண்டு போகின்றது. அத்துடன் பெறறோரும் தமது பிள்ளைகளைப் பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்ப வேண்டுமென விரும்புகின்றனர். ஏனெனில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். பலவகையான பராமரிப்பு வாய்ப்புக்களை வழங்கும்போது அதற்கான செலவுபற்றிய ஒரு மதிப்பீட்டினைப் பெறுவது சிலவேளை கடினமாக இருக்க முடியும். ஆகையால் அவை பற்றிய கணக்கினை நான் சுருக்கமாக இங்கு விளக்க வேண்டியுள்ளது. இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது சமூக நிர்வாக தெரிவுக் குழுவின் கடமையாகும். எம்மால் பின்வரும் வாய்ப்புக்களை வழங்க முடியும்.

| | | |
|---|---|---|
| குழந்தை பராமரிப்பு (வீட்டில்) வாரத்திற்கு 32 மணித்தியாலங்கள்: | 1.072 kr. | மாதத்திற்கு |
| குழந்தை பராமரிப்பு (வீட்டில்) முழுநேரம் | 1475 kr. | மாதத்திற்கு |
| குழந்தை பராமரிப்பு நிலையத்தில் (0-2) | 2138 kr. | மாதத்திற்கு |
| 3-6 வயதுள்ளவர்கள் (வயது ரீதியாக ஒன்று சேர்க்கப்பட்ட நிலையம்) | 1098 kr. | மாதத்திற்கு |
| 7-13 வயதுள்ளவர்கள் | 1001 kr. | மாதத்திற்கு |
| சிறுவர் பொழுதுபோக்கு நிலையம் | 378 kr. | மாதத்திற்கு |

முன்பு கோர்ணிங் உள்ளூராட்சிச்சபையில், சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் பொழுதுபோக்கு நிலையங்களும் ஒன்றாக இருந்தன. ஆனால் இவ்வருடம் அவற்றில் மாற்றம் செய்யப்படுகின்றது. அதாவது வயது ரீதியாக பிள்ளைகளை ஒன்று-சேர்த்த நிலையங்களில் 3 வயது தொடக்கம் 13 வயது வரையுள்ள பிள்ளை கள் இருக்க முடியும். இது ஒரே பராமரிப்பு நிலையத்திலே எல்லா சகோதரர்களும் இருக்கக்கூடிய வாய்ப்பினை அளிக்கின்றது. இதேபோன்று ஒரே இடமாக இருந்தால். பிள்ளைகளை காலையில் நிலையத்திற்கு கூட்டிக்கொண்டு வந்து மாலையில் கூட்டிக் கொண்டுபோவதற்கும் இலகுவாக இருக்கும்.

ஒரு வருடத்தில் 12 மாதங்களுக்கும் பணம் கட்டத் தேவையில்லை எனவும், ஆனால் 11 மாதங்களுக்கு மட்டுமே பணம் கட்டப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகையால் 1993ம் ஆண்டிற்கான பராமரிப்பு நிலைய செலவுகள் முன்குறிப்பிட்டது போலிருக்கும். சமூக நிர்வாக தெரிவுக் குழுவானது பாடசாலை நிர்வாக தெரிவுக்குழுவுடன் இணைந்த சிறுவர்களைப் பராமரிப்பதற்கு என ஒரு புதிய ஒழுங்கினை நடைமுறைப்படுத்தவுள்ளனர். பாடசாலையில் உபயோகத்தில் இல்லாத கட்டிடங்களை இதற்கு உபயோகிக்க இருக்கின்றார்கள். இப்புதிய ஒழுங்கானது "பாடசாலை ஓய்வுநேர ஒழுங்குமுறை" என அழைக்கப்படும். கோர்ணிங் நகரப்பகுதியிலுள்ள பலர் விரும்புவதால் (23ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



Amnesty International er af den opfattelse, at langt de fleste tamiler på nuværende tidspunkt ikke kan opholde sig i fuld sikkerhed og værdighed i noget område på Sri Lanka.

Ifølge de oplysninger Amnesty International har modtaget, bliver næsten alle hjemvendte asylsøgere tilbageholdt og forhørt i op til 48 timer ved deres ankomst til Katunayake Lufthavn nær Colombo. Efter deres frigivelse går de fleste "under jorden", da der ikke tilbydes nogen organiseret beskyttelse eller hjælp fra myndighederne.

I Colombo risikerer de at blive underlagt omfattende kontrol og at udsættes for forfølgelse fra myndighedernes side. Enhver person der tager midlertidigt ophold i den vestlige provins (inkl. Colombo), skal ifølge loven rapportere til nærmeste politi. De personer som ikke kan retfærdiggøre deres ophold i området, risikerer at blive tilbageholdt og forhørt. Amnesty International mener derfor, at alternativet til at opholde sig i Colombo eller andet regerings-kontrolleret område, kun er aktuelt for de tamiler, som har slægtninge i området, eller har boet i området, før de forlod Sri Lanka.

Amnesty International har dog ikke informationer om tamiler, der mod deres vilje er blevet sendt tilbage af Sri Lankas myndigheder til deres hjemstavn i det urolige nordøstlige Sri Lanka.

Tamiler, der har haft forbindelse til de regeringsvenlige organisationer TELO, PLOTE og EPDP, synes at være i mindre fare, hvis de vender tilbage til regerings-kontrollerede områder, men hvis de skulle vende tilbage til et LTTE-kontrolleret område, vil de, ifølge Amnesty Internationals oplysninger, være i meget alvorlig fare for forfølgelse/gengældelse fra LTTE.

Den væbnede konflikt mellem LTTE og regeringsstyrkerne fortsætter i hele det nordøstlige Sri Lanka. Sikkerhedsstyrkerne omringer ofte hele landsbyer, hvor unge mænd, der mistænkes for at være medlemmer af eller sympatisører med LTTE, tilbageholdes og forhøres. Nogle løslades efter kort tid, andre forbliver tilbageholdt eller myndighederne nægter kendskab til dem.

Amnesty International har modtaget rapporter om LTTEs forfølgelse af civilbefolkningen, inkl. tilfangetagelse for løsepenge, og at omkring 2.000 personer har været tilbageholdt af LTTE, herunder personer som LTTE mener er medlemmer af eller sympatisører med rivaliserende tamilske grupper. Mange af disse er angiveligt blevet tortureret eller på anden måde umenneskeligt behandlet.

***Amnesty International er derfor bekymret over muligheden for at tamilske asylansøgere udvises til Sri Lanka, og opfordrer til en særdeles grundig behandling af asylansøgninger fra tamiler, med en meget nøje afvejning af de potentielle risici der er involveret.***

Seneste Amnesty International rapporter om forholdene på Sri Lanka: "Deliberate killings of muslim and tamil villagers in Polonnaruwa", AI index ASA 37/10/92, "Summary of human rights concerns during 1991", AI index ASA 37/01/92.

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை

## சர்வதேச மன்னிப்புச்சபை
## 27 ஐப்பசி 1992

**புகலிடம்கோரும் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதனால், அவர்களுக்கு அங்கு ஆபத்து இருக்குமென சர்வதேச மன்னிப்புச்சபை மேலும் கவலையடைகின்றது.**

கடந்த பத்து வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சனை ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததென்றும், தொடர்ந்தும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்நாட்டு யுத்தம் ஒன்று எல்.ரீ.ரீ.ஈக்கும் (தமிழீழ விடுதலைப் புலிகள்) இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் இடையில் கடும் மோதல் நடந்து கொண்டிருப்பதாகவும், புகலிடம் கோரும் தமிழர்கள் தங்களைத் திருப்பியனுப்புவதால் உயிருக்கு ஆபத்து உண்டென்பதை சர்வதேச மன்னிப்புச்சபை கருத்தில் கொள்கின்றது.

இலங்கை, ஒரு மனித உரிமை மீறல் நிலைக்களமாயிருப்பது மட்டுமல்ல, அரசாங்கத்தினாலும், வெவ்வேறு அரசியல் அமைப்புகளினாலும் குற்றம் இழைக்கின்றது. மேலும்இலங்கையின் நிலைமைகளை சர்வதேச மன்னிப்புச்சபை கீழ்க்காணும் பகுதிகளை விபரமாக விளக்குகின்றது.

இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைப்பாடுகளைப்பற்றி எடுத்துக்கூற சர்வதேச மன்னிப்புச்சபையைக் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து பெரும்தொகை அகதிகளாக வந்த தமிழர்களை சர்வதேச மன்னிப்புச்சபையின் டென்மார்க் கிளை அதன் காரியாலயத்தில் வைத்து ஒரு பேட்டி கண்டார்கள். எல். ரீ. ரீ. ஈ., பரந்த அளவில் துன்புறுத்தலிலும் ஆக்கிரமிப்புகளிலும் ஈடுபட்டுள்ளார்களென்றும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அடுத்து அவர்கள்தான் இலங்கை அரச படைகளுடன் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மோதும் ஒரு பெரும் எதிரிகளாகும்.

தமிழர்கள் எல்லோரும் எல். ரீ ரீ. ஈ. யின் ஆதரவாளர்கள் என்று அரசாங்கத்தின் அதிகாரிகளினால் சந்தேகிக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றார்கள், தடுத்து வைக்கப்படுகின்றார்கள். சித்திரவதை செய்யப்படுகின்றார்கள், காணமல் போகின்றார்கள், மரணதண்டனையும் விதிக்கப்படுகிறது. இவைகளெல்லாம் சட்டத்தை மதிக்கப்படாமல் அளிக்கப்படும் தண்டனையாகும்.

மற்றைய சில இயக்கங்களாகிய ரெலோ, புளொட், ஈ. பி. டி. பி. இவைகளும் அரசாங்கப்படைகளுடன் ஆயுதம் ஏந்தி அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் கொழும்பிலும் இயங்கி வருகின்றார்கள்.

புகலிடம் கோரும் தமழராகிய தாம் திருப்பி இலங்கைக்கு அனுப்பப்பட்டால், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குச் சென்றால், பணம் பறித்தல், மானபங்கப்படுத்தல், சித்திரவதைப்படுத்தல், காணமல் போகுதல், மரண தண்டனை விதித்தல் ஆகியவற்றிற்கு ஆளாக நேரிடுமென்று பயப்படுகின்றார்கள்.

நீண்டகாலமாக இன்னும் இலங்கையின் சில பகுதிகளில் பெருமளவிலான தமிழ் மக்கள் பாதுகாப்பில்லாமலும் கௌரவிக்கப்படாமலும் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்களென்று சர்வதேச மன்னிப்புச்சபை விளங்கிக் கொள்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com



தஞ்சம் கோரியவர்களில் சிலர் சொந்தநாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்ட பொழுது, அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, கைது செய்யப்பட்டு 48 மணி நேர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தினாலும் வேறு சங்கங்களின் கிட்டாததினால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டபின் மறுகணம் காணமல் போகின்றார்கள் அல்லது "நிலத்துக்கடியில்" அனுப்பப்படுகின்றார்கள்.

கட்டுப்பாட்டுக்குள்ளான கொழும்புப் பகுதிகளில் அரசாங்கத்தினால் தமழர்கள் சித்திரவதைக்குள்ளாகியும், தடுத்து வைக்கப்பட்டுமுள்ளார்கள் அரசாங்கச் சட்டப்படி தமிழர் ஒருவர் கொழும்பில் தங்கவேண்டியிருந்தால் அவர் தன்னுடைய விலாசத்தை அண்மையிலிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்தல் வேண்டும். அப்படி நிருபிக்கப்படாவிடில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவார்.

எனவே கொழும்பில் அல்லது அரசினரால் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலோ அல்லது இன பந்துக்கள் வாழும் பகுதிகளிலோ அல்லது இலங்கையை விட்டு வருமுன் இருந்த இடங்களில் மாற்றீடாக தங்கலாமென சர்வதேச மன்னிப்புச்சபை கருதுகின்றது.

இலங்கை அரசாங்கம், தமிழர்களை அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக அமைதியற்ற வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்புவதான தகவல்கள் சர்வதேச மன்னிப்புச்சபைக்கு கிடைக்கவில்லையென தெரிவிக்கின்றார்கள்.

அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும் இயக்கங்களாகிய ரெலோ, புளொட், ஈ. பி. டி. பியின் கருத்துப்படி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் பெருமளவு ஆபத்தில்லை என்கிறார்கள். எல் ரீ. ரீ. ஈ. யின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுப்பப்பட்டால் பெருமளவு சித்திரவதை செய்யப் படுவார்கள் அல்லது பழிவாங்கப்படுவார்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கூறுகின்றது.

எல். ரீ. ரீ. ஈக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஆயுதம் ஏந்திய போராட்டம் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் அரசாங்க படையினரால் தமிழ் வாலிபர்கள், புலி அங்கத்தவர்கள் அல்லது அனுதாபிகள் என்று சந்தேகிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் படுகின்றார்கள். பின் கைது செய்யப்படுகின்றார்கள். சிலர் சில நாட்களுக்குப் பின் விடுதலை செய்யப்படுகின்றார்கள் ஏனையோர் அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படாமல் உள்ளனர்.

எல். ரீ. ரீ. ஈ. பிரசைகளை சித்திரவரை செய்வதாகவும், பணம் பறிப்பதாகவும், கிட்டத்தட்ட 2000 பேர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், எல். ரீ. ரீ. ஈயின் எதிரிகளான மற்றைய தமிழ் இயக்கங்களைச் சேர்ந்தவர்களையும் அவர்களுடைய ஆதரவாளர்களையும் மேற்கூறப்பட்ட குற்றச் செயல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை கூறுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



**பிறப்பு**
**14-05-1943**



**இறப்பு**
**30-09-1992**

# ASTRID JENSEN

**Astrid** இளம் வயதில் மொழியிலும், இலக்கியத்திலும் மிகத் திறமையுள்ள மாணவராகத் திகழ்ந்தார் **København** பல்கலைக்கழகத்தில் பட்டதாரிப் படிப்பில் மிகத் திறமையாக சித்தியெய்தியதால், புலமைப் பரிசில் பெற்று, நெதர்லாந்து சென்று மேற்படிப்பை மேற்கொண்ட பின்னர், நெதர்லாந்தில் தொடர்ந்து 18 வருடங்கள் பல தொழில்களை மேற்கொண்டார். டச மொழியில் திறமை பெற்ற பின்னர் டச்-சுவீடிஸ் மொழியகராதியை எழுதி வெளியிடும் குழுவில் ஒருவராக இருந்தார். நெதர்லாந்தில் வாழ்ந்துவரும் காலங்களில் பெண்களுக்கு விடுதலை, மனித உரிமை போன்ற அமைப்புகளில் நிர்வாகசபை உறுப்பினராக இருந்தார். அந்தக் காலகட்டங்களில் பெண்கள் விடுதலை தொடர்பாக பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். சொந்த நாட்டில் வாழவேண்டும் என்பதல் 1984ம் ஆண்டு நாடு திரும்பினார். இதன் பின்பு Herningகிலும் மற்றைய இடங்களிலும் தமிழர்கட்கு டெனிஸ் மொழி கற்பிற்கும் ஆசிரியையாக கடமையாற்றினார். டெனிஸ் மொழி கற்பிற்கும் காலங்களில், தமிழ் மக்களிடம் துன்பங்களில் பங்கு கொண்டது மட்டுமல்லாமல், ஒரு இனத்தின் கலாச் சாரம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதனை பல ஆதாரங்களுடன், பல தடவை எடுத்துக் கூறியுள்ளார் பல குடும்பங்களுக்கு தொடர்பு குடும்பங்களாகவும் பலருக்கு பல வழிகளிலும் பல உதவியும் செய்துள்ளார் என்பது முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயமாகும். 1986ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியத்தின் வேலைத்திட்டக் குழுவில் தன்னையும் இணைத்துக் கொண்டு 1988 பங்குனிவரை, நிர்வாக சபை உறுப்பினராக இருந்து எமக்குப் பெரும் உதவி புரிந்தார்.

**இறையடி எய்திய அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஒன்றியத்தின் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் அஞ்சலிகள்**

**-திலீப் கணேசகுமார்-**



படிப்பகம்

www.padippakam.com



# கடந்த இதழ் சங்கம மாமாவின் கேள்விகளுக்குப் பதில்கள்.

1. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்
2. றைட் சகோதரர்கள், 1903ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி.
3. பிரபல பாடகரும், கவிஞருமான ஆனந்த சமரக்கோன் அவர்கள்.
4. வலது காலை.
5. 7 பிரிவுகள்: பாலகாண்டம், அயோத்தி காண்டம், கிட்சிந்தாகாண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம், ஆரணியகாண்டம், உத்தரகாண்டம்.
6. தாஜ்மஹால்

சரியான விடைகளை எழுதிய அதிர்ஸ்டசாலிகளில் முதல் மூவரின் பெயர் பின்வருமாறு.

1. அமிர்தினி நாகேசன், கோணிங்
2. ஸ்ரீவாணி தியாகராஜா, பிலூண்ட்.
3. A. ஜெராட், கிறீன்ஸ்ரட்

இவர்களுக்கு சங்கம மாமாவின் நல்லாசிகள்.

## விடுகதை

சென்ற இதழில் சங்கமமாமா விடுகதை ஒன்றை சங்கம வாசகர்களுக்கு வெளியிட்டிருந்தார். விடுகதையின் விடையை பல வாசகர்கள் எழுதி அனுப்பியுள்ளனர். அதில் இருவர் மட்டுமே சரியான விடைகளை எழுதியுள்ளனர்.

சரியான விடைகளை எழுதிய இருவரின் பெயர்கள்:

1. செல்வி. ஸ்ரீவாணி தியாகராஜா, பிலூண்ட்.
2. அமிர்தினி நாகேசன், கோணிங்.

இவர்களுக்கு சங்கம மாமாவின் நல்லாசிகள்

# இம்முறைக்கான விடுகதை

இம்முறை சங்கம மாமா இரண்டு விடுகதை சொல்லப் போகின்றார். அந்த விடுகதைக்கு விடை தெரிந்த தம்பி, தங்கைகள் மாமாவிற்கு எழுதுங்கள்.

1. ஓடுவர் உலாவுவர் ஒற்றைக் காலில் நிற்பர்.

2. அந்தரத்தில் தண்ணியும் செம்பும்.

உங்கள் விடைகளை 31-01-93ற்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**"Sangamamama"**
Sangamam
P.O. Boks 313
7400 Herning



படிப்பகம்

www.padippakam.com



## டென்மார்க்கில்
# தமிழ்மொழிக் கல்வியும்/பிரச்சனைகளும்
## ஓர் மதிப்பீடு

-முல்லையூரான்-

டென்மார்க்கில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழ் அகதிக் குழந்தைகளின் **"தாய் மொழிக்கல்வி"** தொடர்பாக அத்தகைய மொழிப் பாடசாலைகளில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பாக, (தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் - 25 தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களினை அடிப்டையாகக் கொண்டு) இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

டென்மார்க்கின் பல பாகங்களிலும் தனித்தனியாக இயங்கிவரும் பாடசாலைகளின் ஆசிரியர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களின்படி - தமிழ் மொழியினை கற்பிப்பதில் ஆசிரியர்களும்/மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளை வகைப்படுத்து முன்பாக; டென்மார்க்கின் தமிழ்மொழிக் கல்வி தொடர்பாக நிலவி வரும் உண்மைகள் சிலவற்றை கூறிக்கொண்டு செல்லுதல் அவசியமாகின்றது.

டென்மார்க்கில் இயங்கிவருவனவும் எங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 25 பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட தகவலின்அடிப்படையிலும் STATISTIK ÅR BOG - "BEFOLKNING OG VALG" எனும் பகுதியிலிருந்து பெறப்பட்ட புள்ளி விபரங்களின் படியும் ஓர் அண்ணளவு மதிப்பீட்டில் பின்வரும் அட்டவணையை தயாரிக்க முடிந்தது.

| விபரம் | வயது | | | பால் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | 5-9 | 10-14 | 15-19 | ஆண் | பெண் | |
| 1. தை 1992ன் புள்ளி விபரப்படி டென்மார்க்கில் உள்ளவர்கள். | 592 | 429 | 252 | 628 | 645 | 1273 |
| தாய் மொழிக் கல்விக்கு செல்வோர் (25 பாடசாலை) | 171 | 248 | 66 | 236 | 249 | 485 |
| தாய் மொழிக்கல்வி பெறாதவர்கள் விகிதத்தில் | 71.2% | 57.1% | 73.9% | 62.5% | 61.4% | 61.1% |

மேற்காணும் அட்டவணை காட்டுவதன்படி, சுமார் 61.1% மாணவர்கள் தமிழ்மொழிக் கல்வியினை பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை என்றோ, அல்லது அந்த வசதியினைப் பெறமுடியாதவர்களாக உள்ளாரென்பது தெளிவாகின்றது. இதில் உண்மையெதுவெனின் "டென்மார்க்கின் பல பாகங்களிலும் சிதறி வாழும் இலங்கைத் தமிழ் அகதிக் குழந்தைகளுக்கு தாய்மொழிக் கல்வி பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதாகும். தாய் மொழிக் கல்வி பற்றிய சட்டங்கள் மாற்றியமைக் கப்பட்டமையே இதற்கு அடிப்படைக் காரணமாகலாம். ஆக தாய்மொழிக் கல்வித் திட்டத்தின் கீழ்வரும் இத் தமிழ்மொழிக் கல்விப் பாடசாலைகள் இன்னமும் விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்த விரும்புகின்றது.

மேலும் தற்போது இயங்கிவரும் பாடசாலைகளில் இடம்பெற்றுள்ள சிக்கல்கள் பிரச்சனைகளை கட்டுரை வசதிகருதி பின்வருமாறு வகைப்படுத்துவோம்.

1. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்
2. வகுப்பறைகளின் வசதியீனங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## 1. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

**1. I** பெரும்பாலான ஆசிரியர்கள் குறைந்த வேதனம் பெறுவதாகவும் அதேவேளை அவர்களின் தொழில்நேரம் குறைவாக இருப்பதாகவும் குறைபட்டுக் கொள்கிறார்கள். பலதரப்பட்ட வயதினரும், பலதரப்பட்ட மொழியறிவுடனும் வகுப்பறைகளை செயற்படுத்தவேண்டிய கட்டாய நிலையை ஆசிரியர்கள் எதிர் நோக்குவதினால், அவர்களுடைய உழைப்பு-பாடசாலைக்குள்ளும் வெளியேயும் அதிகமாக வேண்டப்படுகின்றது. ஆசிரியர் ஒருவர் தனது நேரத்தினை மட்டுப்படுத்தி ஒரேநேர வகுப்பறைக்காக பலதரப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சித் திட்டமிடுகை யிலும், பாடத்திட்டமிடுகையிலும் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**2. II** திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களின்படி 25 ஆசிரியர்களில் 5 ஆசிரியர்கள் தன் தாய்நாட்டில் ஆசிரியத் தொழில் அனுபவம் இல்லாதவராகக் காணப்படுகின்றார்கள். அதேவேளை ஏனைய 20 பேரில் (ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் 25) மிகக் குறைந்த தொகையினரே ஆசிரியப் பயிற்சியைப் பெற்றுமுடித்தவர்கள். சிலர் உயர்கல்வி பெற்றிருந்தாலும் ஆசிரியர் பயிற்சி நெறியைப் பெறாதவர்களாக காணப்படு கின்றார்கள். ஆக மொத்தமாக ஆசிரியர்களுக்கு "பயிற்சி நெறி" ஒன்றின் முக்கியத் தினை இக்கட்டுரையில் வலியுறுத்துவது அவசியமாகின்றது.

அத்துடனன்றி, பிறிதொரு கலாச்சார, மொழி அனுபவத்தில் பெற்ற ஒரு பயிற்சி ஒன்றினை இன்னொரு கலாச்சார மொழி, பண்பாடுகளுக்கமைவாக பயிற்சி நெறி ஒன்றின் அவசியத்தினை பெரும்பாலான ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர். அன்றேல் அதன் தேவையை உணர்பவர்களாக உள்ளனர்.

**1. III** தற்போது டென்மார்க்கில் இயங்கிவரும் பாடசாலைகளில் பாவனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் "நூல்"களை விதந்துரை செய்வோமானால்.

a. பன்னெடுங்காலமாக சீரமைப்புக்குள்ளாக்கப்படாத இலங்கைப் பாடநூல்கள்.
b.. இந்தியத் தமிழ்ப் பாடநூல்கள்.
c. பிற நாட்டு தமிழ் நூல்கள். உ-ம் சிங்கப்பூர்/மலேசியா

இத்தகைய நிலையிலேயே தமிழ்ப் பாடசாலைகளில் நூல்கள் தருவிக்கப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பாடசாலைகளுக்குப் பாடசாலை ஓர் ஒருங்கிணைவோ அன்றேல் ஒரு பொதுமைப்பாட்டினையே காண்பதில் சிரமமுண்டு. அதுவுமல்லாமல் இத்தகைய நூல்களின் பிரயோகத்தினால் மொழியியல் ரீதியில் பெரும் வேறுபாடுடைய நாடுகளிலிருந்து பெறப்படும் இத்தகைய கல்விமுறையில் தமிழ் அகதிக் குழந்தைகள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

**1. IV** மேற்கண்ட பிரச்சனையை தீர்வுக்குக் கொண்டு வருமுகமாக அனேக ஆசிரியர்கள் "ஒரு பொதுப்பாடத்திட்டம்" ஒன்றின் தேவையை மிகவும் வலியுறுத்தி வருகின்றனர். பொதுப்பாடத்திட்டம் எல்லாப் பாடசாலைகளிலும் பொதுவான பாடநூல்களின்மையினால் ஆசிரிய/மாணவர்கள் பொதுப்பரீட்சை ஒன்றின்கீழ் கொண்டுவரப்படுவதிலோ அன்றேல் பாடசாலைக்களுக்கிடையிலான இணைந்த வேலைத்திட்டங்களை சில சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

**1. V** பிள்ளைகளின் ஆர்வ மிகுதியை ஆசிரியர்கள் விதந்துரை செய்தபோதும் அவர்களின் தமிழ் மொழிக் கல்வியிலுள்ள கரிசனையை வளர்த்தெடுப்பதிலுள்ள



படிப்பகம்

www.padippakam.com



சிக்கல்களை மேற்கண்டவாறு முறையீடு செய்திருந்தும், இவற்றிற்கான அமைப்பு வடிவங்கள், பொது வேலைத் திட்டங்களற்ற நிலையினை தீர்த்து வைப்பது, டென்மார்க்கில் இயங்கி வரும் பொது ஸ்தாபனங்களின் கடமையாகின்றது.

## 2. வகுப்பறை வசதியீனங்கள்.

a. நூல்களின் பற்றாக்குறை.
b. துணைக் கருவிகளின் பற்றாக்குறை.
c. வகுப்பு நடைபெறும் நாட்களும்/நேரங்களும்.
(விடுமுறை நாளாகவோ அன்றேல் பிள்ளைகள் சோர்வடையக் கூடிய நேரமாகவோ அமைந்திருக்கின்றது).

குறிப்பாக இத்தகைய பிரச்சனைகள் அன்றேல் வசதியீனங்களினால் மொழிக் கல்வியினை புகட்டுவதில் மிகப் பெரிய பலாபலனை மாணவர்கள் பெறமுடியாதுள்ளது. இதனைப் பல ஆசிரியர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஒரு நிலைப்பட்டு இப்பிரச்சனையை கவனம் கொள்வோமேயானால் 1. ஆசிரியர்கள் பயிற்சி 2. பொதுவான பாடத்திட்டம் 3. பொதுவான பாடநூல்கள் அமைக்கப்படுவதன் அவசியத்தை புரிந்துகொள்ள முடிகின்றது. இம் மூவகையான தீர்வும் இதற்கப்பாலுள்ள வகுப்பறை வசதியீனங்கள் தீர்க்கப்படுவதுமே, ஓர் நேர்த்தியான பாடசாலை இயக்கத்திற்கும், அதன் சிறந்த பெறுபேறுகளுக்கும் வாய்ப்பாக அமையலாம்.

நன்றி.

---

3ம் பக்கத் தொடர்ச்சி

**டென்மார்க்கில் அரசியல்.........**

தாகவுள்ளது. இது ஜனநாயக சமுதாயத்தின் நிலையாகும். இப்படி இருப்பதனால் நாட்டின் அரசியல் கொள்கையை எதிர்க்கட்சிகள் நடைமுறைப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

ஆதலால், தமிழ் அறிக்கையானது விரைவில் வெளிவரவேண்டும். அதனால் பல நெருக்கடிகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்கவேண்டியது தவிர்க்க முடியாதது ஒன்றாகும்.

பொது மக்களுக்குப் எதிராகப் போராட வேண்டிவரும். புதுவருடம் வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

-Troels Johansen-



படிப்பகம்

www.padippakam.com



# பலதரப்பட்ட வெளிப்படையான கலாச்சாரமும், ஒருங்கிணைப்பு வேலையும்

டென்மார்க்கில் வாழுகின்ற சிறுபான்மை இனத்தவர், சமுதாய அளவிலோ அல்லது தமது சொந்த அளவிலோ பாரிய முடிவுகளை எடுப்பதில் அதிக செல்வாக்கினைப் பெற்றிருக்கவில்லை என்றே கூறவேண்டும். அதாவது குடியேறியோரைப்பற்றியோ அல்லது அகதிகளைப்பற்றியோ அரசியல் மட்டத்தில் இருக்கும் டெனிஸ் மக்கள் மாத்திரம் தனியே கலந்து கொள்கிறார்கள். எந்த விதத்திலும் சிறுபான்மை இனத்தவரின் ஆலோசனையைக் கேட்க வேண்டும் என்று சிந்தித்ததேயில்லை.

அரசியல்வாதிகளும், அதிகாரத்தில் இருப்பவர்களும், வெளிநாட்டவரின் சட்டத்தினை குடியேறியோரின் ஸ்தாபனங்களுக்கோ அல்லது அரசாங்கத்தின் ஒருபகுதியாக இயங்கும் "குடியேறியோர் ஆலோசனைக்குழு" விற்கோ அவர்களின் ஆலோசனைக்கு அனுப்புவதற்கு மறந்துவிடுகின்றார்கள். குடியேறியோரின் வேலை சம்பந்தமாக இரண்டு குழுவினர் தற்பொழுது ஆராய்ந்து வருகின்றார்கள். அதற்காக குடியேறியோர் ஆலோசனைக்குழுவினை மட்டுமே கேட்டிருந்தார்கள். ஆனால் அவரவர்களின் சொந்த சங்கங்களைக் கேட்பதற்கு எப்பொழுதுமே மறந்துவிடுகின்றார்கள்.

தற்பொழுது வெளிநாட்டுப் பெண்களின் வேலையைப்பற்றி ஆலோசித்து முடிவு எடுப்பதாக இருந்தாலும் ஒரு டெனிஸ்கார ஆடவர்குழு மட்டுமே பங்குபற்றும் அளவிற்கு நிலமை இருக்கின்றது. உலகில் எந்த நாட்டில் என்றாலும் வெளிநாட்டவர் சம்பந்தமான விவாதங்கள் நடக்கின்ற பொழுது அவர்களையும் அழைப்பது வழக்கமாகவுள்ளது. ஆனால் அது இங்கே மாறுபட்டதாக காணப்படுகின்றது.

நாங்கள் கேட்பது என்னவென்றால், எமது நிலமைபற்றி ஆராய்கின்ற பொழுது எம்மையும், எமது ஸ்தாபனங்களையும் நாமே பிரதிநிதிப்படுத்த வேண்டும் என்பதாகும்.

பல பொது நிலையங்களும், ஆர்வமுள்ள டெனிஸ் தாபனங்களும் நாளாந்தம் குடியேறியோருடனும் அகதிகளுடனும் அவர்கள் பற்றிய பிரச்சனை சம்பந்தமாகத் தொடர்பு கொண்டு வருகின்றார்கள். ஆனால் ஒரு சிறுபான்மை இனத்தவரைக்கூட நிரந்தரமாக வேலையில் அமர்த்துபவர்களாகத் தெரியவில்லை. எனவே IND-SAM ஆனது அமைச்சுக்களுக்கும், உள்ளூராட்சிச்சபை போன்ற ஏனைய அதிகாரசபைகளிடமும் கடித மூலம் கேட்டிருப்பது என்னவென்றால், எல்லா இடத்திலும் சிறுபான்மை இனத்தவரை அதிகளவில் வேலைக்கமர்த்த வேண்டும் என்பதாகும்.

எமக்கு மேல்மட்டத்தில் அதிகளவில் செல்வாக்குக் கிடைக்கும்பட்சத்தில் எமது பிரச்சனைகளையும் எமது எதிர்கால சந்ததியினரது பிரச்சனைகளையும் இலகுவாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்பதில் ஐயமில்லை.

குடியேறியோர் சங்கங்களும், அகதிகள் சங்கங்களும் இணைந்து முழுமுச்சுடனும் முயற்சிசெய்து எமக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் போன்றவற்றிற்காகப் பாடுபடல் வேண்டும். அதாவது எமது முழுப்பலத்தையும் பாவித்து வசிப்பிட வசதி, வேலைவசதி, மற்றும் ஒற்றுமைக்காகப் பாடுபடுவோம்.

IND-SAM



படிப்பகம்

www.padippakam.com



Leder

# Multikulturel åbenhed og samarbejde

De etniske minoriteter i Danmark har ikke megen indflydelse på beslutninger, hverken om almene samfundsforhold eller egne forhold. Politiske beslutninger om indvandrere og flygtninge diskuteres i lukkede rum i ministerier og kommuner af danskere alene, uden at man overhovedet tænker på at spørge de etniske minoriteter.

Det skete fornyligt, da politikerne og embedsmænd glemte at sende udlændingeloven til høring i indvandrernes organisationer, ja endda regeringens eget rådgivende organ Indvandrerrådet blev glemt. Og det skete igen, da man skulle sammensætte de to udvalg om ligebehandling af udlændinge og barrierer for indvandrere på arbejdsmarkedet. Man "glemte" indvandrernes egne organisationer, kun Indvandrerrådet blev spurgt. Og værre endnu man ville ikke rette fejlen, selvom vi bad om at deltage.

Idag ville det være uhørt, hvis en gruppe af danske mænd alene skulle diskutere og træffe beslutninger om kvinders ligestilling. Men for embedsmænd og politikere er det endnu ikke blevet den naturligste ting i verden at invitere indvandrere med til diskussioner om indvandrerforhold.

Vi må kræve denne ret til at være repræsenteret ved os selv og vore organisationer og ikke pr. stedfortræder. Mange indfødte danskere har selvfølgelig en udmærket forståelse af forholdene, men hvis vi går vejen sammen, vil den føles lettere og mere demokratisk.Vi vil derfor opfordre de danske beslutningstagere til ikke at glemme indvandrerne som en ligeværdig befolkningsgruppe.

Mange offentlige institutioner og interesseorganisationer, der dagligt er i kontakt med indvandrere og flygtninge, har heller ikke ansat en eneste person fra de etniske minoriteter og har ikke givet indtryk for, at de anser det for et problem. Derfor har IND-sam sendt et brev til udvalgte ministerier, kommuner og faglige organisationer for at gøre dem opmærksom på, at det er et problem og opfordre dem til at ansætte flere mennesker fra de etniske minoriteter.

Hvis vi skal have indflydelse, må vi også stille krav til os selv. For vi får ikke indflydelsen serveret på et sølvfad. Det er en politisk kamp, som vi må vinde for samfundets, vores egen og vore børns skyld.

Vi har brug for en kraftfuld borgerretsbevægelse, og derfor må vi prioritere mobilisering og organisering af indvandrere og flygtninge. Vi må diskutere indvandrerpolitikken og alternativer i foreningerne og alliere os med de gode kræfter i fagbevægelsen, boligbevægelsen, solidaritetsorganisationer og anti-racistiske-grupper. Vi må dygtiggøre os og fremfor alt arbejde sammen på tværs af etniske grænser.

**IND-sam**



படிப்பகம்

www.padippakam.com



## NØRREGADE 7 - MØDELOKAKLER I MIDTBYEN

Lørdag den 3. oktober blev den tidligere skole i Nørregade officielt indviet - det er en kombination af tre ting:

**Dagcenter for pensionister og efterløsmodtagere.**

**Ungdomsskole.**

**Aktivitets- og medborgerhus.**

Det blev en meget festlig dag, bl.a. aflagde socialministeren, Else Winther Andersen, besøg.

Filosofien bag denne utraditionelle men meget gode kombination i den tidligere skoler er, at vi skal prøve at undgå at gruppere mennesker efter alder, interesser, m.v. Det er langt bedre at prøve at lade mennesker af vidt forskellig alder mødes. Ældre mennesker vil kunne lære børn og unge mange ting, ligesom mange børn og unge har behov for en god voksenkontakt. På samme måde vil det være fornuftigt for ældre mennesker at mødes med og være sammen med børn og unge, som ofte tænker og opfører sig anderledes end de ældre, da de var i samme alder.
Jeg tror meget på at blande mennesker, for kun ved at mødes og udføre aktiviteter sammen kan vi fjerne fordomme og misforståelser
Huset er fælles for alle brugere. Alligevel kan man sige, at der er lokaler, som primært henvender sig til de ældre, ligesom ungdomsskolen på 1. sal primært anvender lokalerne der. Alle kan mødes i cafeteriet i nederste etage, og alle kan bruge værksteder, sale og lokaler, hvis der er ledigt. Men eftersom der er hårdt brug for

Læs side 20

படிப்பகம்

www.padippakam.com



# நகரத்தின் மத்தியில் சந்திப்புக் கூடம்

முன்னைய Nørregade பாடசாலையானது, 3.10. 92ல், உத்தியோகபூர்வமாக பல செயல், பொதுநிலையமாக திறந்து வைக்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு சமூகசேவை அமைச்சர் எல்சு வின்ரர் அனசன் சமூகமளித்திருந்தார்.

இப்பொதுநிலையத்தில் பல விடயங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.

பகல் நேரங்களில், ஓய்வூதியம் பெறுபவர் பாவிக்கக்கூடியதாகவும், இளைஞர் கல்வி நிலையம், பல செயல்களுக்கான பொது நிலையம் என்பனவாகும்.

தத்துவரீதியாக, பலவிடயங்கள் ஒன்றிணைந்து இருப்பதால் வழமைக்கு மாறானது ஒன்றாகும். சிறுவர்களும், இளைஞர்களும் பலவிடயங்களை, அறிய வேண்டியது நல்லதாகும். இதேபோல் வயது வந்தோர்க்கும் சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கு மிடையில் தொடர்பு இருப்பது கருத்துடையதாகும். வேறுபட்ட வயதுடையவர்களி டமிருந்து கருத்து வேறுபாட்டை காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான சந்திப்புக்கள் ஒன்றுசேர்ந்து செயற்படுவதால் பிழையான அபிப்பிராயங்களை, கருத்துக்களை தீர்த்துக்கொள்ள சுலபமாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

இந்நிலையமானது எல்லோருக்கும் பொதுவானது, அப்படியிருப்பினும் சில இடங்கள் குறிக்கப்பட்ட தேவைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக முதலாம் மாடி இளை ஞர்களின் தேவைக்கென முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கீழ்மாடியில் தேனீர்ச சாலை ஒன்று, பட்டறை ஒன்றும் உண்டு. சங்கங்களோ, வேறு அமைப்புக்களோ நிரந்தரமாக ஒரு இடத்தினைப் பெறமுடியாது. ஆனால் தங்களுக்கு தேவை ஏற்படும்போது முன்கூட்டியே, பதிவு செய்து இடங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 97 12 72 44 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டும் இடங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பலர் இவ்விடங்களை முன்கூட்டியே பதிவு செய்து உபயோகிப்பதனால், நீங்களும் உபயோகிக்க விரும்பின் காலதாமமின்றி முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

Troels Johansen

---

## வாசகர் கவனத்திற்கு

அடுத்த சங்கமத்திற்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவர்களும், பிறந்தநாள் படங்கள் போட விரும்புவர்களும் தயவு செய்து 31-01-93ற்குபிந்தாமல் அனுப்பி வைக்குமாறு மிக தாழ்மையாக கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

-இப்படிக்கு
சங்கமம்



படிப்பகம்

www.padippakam.com



lokaler fra klubber, foreninger, m.v., kan man ikke få overladt et lokale som sit eget private lokale. Alle er nødt til at bestille det eller de lokaler, man skal bruge.
Hvis nogen ønsker at bestille lokaler, kan man møde op på Nørregade 7 i selve bygningen og henvende sig i receptionen.
Man kan også bestille lokaler på telefon 97 12 72 44.

Da der som nævnt er et stort behov for lokaler, vil det være en god ide at henvende sig så hurtigt som muligt og lave aftaler om brug af lokalerne.

Troels Johansen



படிப்பகம்

www.padippakam.com



# கல்லும் மண்ணும் தோன்றமுன் தமிழ் தோன்றியதா?

-கே. எஸ். துரை-

"கல்லும் மண்ணும் தோன்றமுன் தமிழ் எங்கிருந்து தோன்றியது? கந்த புராணத்தின் கடைசி ஒற்றையிலும் உந்தப்புழுகு கிடையாது!" என்ற பொருள்பட திரு. க. ஆதவன் அவர்கள் சங்கமம் இதழில் எழுதிய கருத்துக்கள் தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் தொடர்வதை அறியமுடிகிறது. இந்தப் பாடலை அலட்சியம் செய்யும் கருத்துக்களை எழுதும்போது திரு. ஆதவன் அவர்கள் கூடிய கவனமெடுத்துச் சிந்தித்திருக்க வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்து.

ஆதவன் அவர்கள் "கல்தோன்ற மண்தோன்ற முன்" என இப்பாடல் வரிகளை எழுதி (பார்க்க: சங்கமம் 16, 17) வாசகர்ளுடன் பேச முற்பட்டது அடிப்படையிலேயே தவறு. ஏனெனில் இப்பாடலின் வரிகள் உண்மையாக பின்வருமாறே அமைந்துள்ளன. (ஆதார நூலை அப்படியே பிரதி செய்து அனுப்புகின்றேன்).

அ. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்தகுடி"
(ஆதாரம்: தமிழ்ப்பேழை பக்கம் 18. 5வது உலகத் தமிழாராட்சி வெளியீடு)

தமிழ்ப்பேழை:
-டாக்டர் ஆறு. அழகப்பன்-

*1. தமிழ்மொழி*

**தமிழின் தொன்மை :**

*"! தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்— இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய் !"*

*எனத் தாய்நாட்டின் தொன்மையைக் குறித்துப் பாடினார் பாரதியார். தாய்மொழியாம் தமிழும் அத்தகையதுதான். 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' எனப் பாராட்டப்பட்ட தொன்மை உடையது தமிழ்க்குடி !*

## கல்தோன்றி என்றால் என்ன?

மேற்கண்ட பாடல் வரிகளைக் கொஞ்சம் கூர்ந்து கவனியுங்கள் இங்கு கல்தோன்றி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதேயல்லாமல் "கல்தோன்றா" எனக்குறிப்பிடப்படவில்லை. எனவே கல்தோன்றி என்றால் அதன் பொருள் என்ன? தமிழும், தமிழ்க்குடியும் தோன்ற முன்னரே "கல்" என்னும் பொருள் தோன்றிவிட்டது என்பதுதான் இதன் பொருள். எனவே உலகமே தோன்றமுன் தமிழ்க்குடியும் தோன்றிவிட்டதெனப் பாடியுள்ளார் எனப் பாடலைப் பாடியுள்ள புலவர்மீது குற்றம் சுமத்த முடியாது!

மேலும் மனித குலத்தின் வளர்ச்சிக் காலத்தை பழைய கற்காலம், புதிய கற்காலம், பின்பு செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என்றும்



படிப்பகம்

பிரிப்பார்கள். கற்களாலான ஆயுதங்களை மனிதன் பாவித்த காலமே கற்காலம். (ஆதிமனிதர் காலம்). எனவே கல்தோன்றி என்ற சொற்பதத்தின் மூலம் புலவர் குறிப்பிடுவது; கல் ஆயுதமாகத் தோன்றிய காலம் அல்லது கல்லிலிருந்து ஆயுதங்கள் தோன்றிய காலம் என்பதாகும்.

## மண்தோன்றா (காலம்) என்றால் என்ன?

கற்காலத்தின் பின்னரே செப்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் போன்ற காலப்பகுதிகள் உருவாகின்றன. இந்த உலோகங்கள் மண்ணைத் தோன்றி எடுக்கப்படுபவை. எனவேதான் புலவர் இவ் உலோகங்கள் பாவனைக்குத் தோன்றாதன் ஒரு காலத்தையே மண்தோன்றாக் காலமெனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வுலோகங்களை உலகம் அறியமுன்னரே தமிழ்க்குடி தோன்றிவிட்டது என்பதே இதன்கருத்து.

## வாளொடு என்றால் என்ன?

மேலும் இந்தப்பாடல் தமிழ்க்குடிகளை கற்காலத்திற்கு அழைத்துச் செல்லும்போது, அந்த முயற்சியானது திராவிட இனத்தின் பழைய வரலாற்றைக்கூறும் சிந்துவெளி நாகரீகத்தின் காலப்பகுதியுடன் தொடர்புபடு வதையும் அவதானிக்கமுடிகின்றது.

ஏனெனில் இப்பாடலில் வரும் "வாளொடு" என்ற சொற்பதம் மிகமிக முக்கியமான வரலாற்றுச் சான்றாகும். இரும்புக்காலத்திற்கு முற்பட்ட சிந்துவெளி நாகரீகமக்கள் வாளை அறிந்திருந்தனர். ஆனால் எதிரியின் தாக்குதலைத் தடுக்கும் கேடயங்களை அறிந்திருக்கவில்லை, ஆகையால்தான் வாளையும் கேடயத்தையும் பாவித்து போர் புரிந்த ஆரியரால் வெற்றிகொள்ளப்பட்டனர். எனவேதான் கல்லிலிருந்து வாளைக்கண்டுபிடித்த, (கேடயங்களை அறியாத) தொன்மைமிக்க காலத்தில் தோன்றியகுடி என்பதையே வாளொடு என்னும் அடையாளம் காட்டுகிறது.

## முன்தோன்றி என்பதன் கருத்து யாது?

மனிதகுலம் தோன்றிய ஆரம்பகாலத்தில் விலங்குகளுடனேயே மனிதன் வேறுபாடின்றி வாழ்ந்தான். கற்களாலான ஆயதங்களைக் கண்டுபிடித்து, விலங்குகளிலிருந்து வேறுபட்ட மனிதகுலம்: பகுத்தறிவுள்ளவனாக தன்னை அடையாளம்காட்டிக் கொண்டபோது அந்த முயற்சியில் முன்தோன்றிய குடிகளில் ஒன்று தமிழ்க்குடி என்பது இதன் உட்பொருளாகும்.

## மூத்தகுடி என்பதன் கருத்து யாது?

"மனித இனத்திலேயே முதலாவது தோன்றியது தமிழினமே!" என்று கூறும் பொறுப்பற்ற எண்ணம் புலவருக்கில்லை: என்பதையே இச்சொற்பொருள் காட்டுகின்றது. ஒரு தாய்க்கு முன் பிறந்த பிள்ளை மூத்தபிள்ளை, பின்பிறந்தது இளையபிள்ளை என நாம் சாதாரணமாகக் கூறுவோம். உண்மையில் முதலாவதாக அடிப்படையொன்று இருந்தால்தான் மூத்தவரும் இளையவரும் தோன்றமுடியும். எனவே முதலாவது அடிப்படையே ஆரம்ப மனிதகுலம். அதிலிருந்து நாகரீகத்துடன் தோன்றிய மூத்தகுடியே தமிழ்க்குடி என்பது இதன்கருத்து.

www.padippakam.com

## சங்கமம்

மேற்கண்ட பின்னணியில் நோக்கினால் இந்தப்பாடலில் ஒவ்வொரு எழுத்தும் விஞ்ஞான முடிவுகளையே தாங்கி நிற்பதைக் கண்டுகொள்ள முடியும். ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மலரிலும் இப்பாடல் பிரதான வாசகமாக மிளிர்கிறது. இப்பாடல் பொய்யும் புழுகும் நிறைந்ததானால் நக்கீரத்தனம் நிறைந்த தமிழறிஞர்கள் இத்தனையாண்டுகளாக இப்பாடலை உறுதியுடன் ஒலித்திருக்கமாட்டார்கள்.

மேலும் "தொன்று நிகழ்ந்தனைத்தும் உணர்ந்திடு சூழ் கலைவாணரும் இவள் என்று பிறந்தனள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்" என்று தமிழின் தொன்மையைப் பாடவந்த பாரதியாரே அதற்கொருகால எல்லையைத் தரவில்லை. ஆனால் இப்பாடலோ வரிக்குவரி விஞ்ஞான முடிவுகளைத் தழுவியே செல்வதைக் காணமுடிகின்றது.

ஆதவனுக்கும் அவர்தம் வாசகர்களுக்கும் என் வாழ்த்துக்கள்

---

6ம் பக்கத் தொடர்ச்சி

கோர்ணிங் உள்ளூராட்சிப் .........

Brændgårdskoleல் 20 பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையத்தை ஆரம்பிப்பது என உள்ளூராட்சிசபை முடிவு செய்துள்ளது.

கோர்ணிங் உள்ளூராட்சிப் பகுதியில் வாழும் பெற்றோர் மேலதிக விபரங்களை பெற விரும்பினார், நகரசபைக் காரியாலயத்தில் அமைந்திருக்கும் பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலைய காரியாலயத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே பிள்ளைகள், பாடசாலை செல்பவர்களாக இருப்பின், பாடசாலை நிர்வாக காரியாலத்தில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

-Troels Johansen-



படிப்பகம்

www.padippakam.com



# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07-07-1946

மறைவு
18-11-1991

## நடராஜா கணேசகுமார்

காலம் உருண்டோடி ஒன்றாகின்றது
உன் நினைவுகள் எமைவிட்டு நீங்கவில்லை
நீ வளர்த்த தோழமை ஒன்றியத்தின்
சார்பில் எம்
கண்ணீர் அஞ்சலிகள்



படிப்பகம்

www.padippakam.com



# கருத்தரங்கு

ஹேர்ணிங் டெனிஸ்-தமிழ் தோழமை ஒன்றியம் "ஐரோப்பாவில் எதிர்காலத்தில் அடிப்படை மனித உரிமைகள்" என்ற கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியானது 09-01-1993 சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு LIND SKOLE, KOLLUNDVEJ, LIND, HERNINGஇல் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிநிரல்

11.30 வரவேற்புரை.
12.00 மதிய உணவு 30Kr. குடிபானம் வாங்கலாம்.
13.00 கருத்தரங்கு ஆரம்பம்.
பேச்சாளர்கள்: 1. திரு. **Arne Piel Christensen** (செயலாளர்நாயகம், டெனிஸ் அகதிகள் உதவிச் சங்கம்)
2. திரு. **Morten Kjærum** (தலைவர், **Det Dansk Center For Mennskerettigheder**).
3. கலாநிதி. **Ann Belinda Steen.**

இதற்கு மேலாக, அகதிகள் மனித உரிமைகளுக்கான விடயங்களில் ஊக்கமுள்ள ஒன்று அல்லது இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

14.30 இடைவேளை. தேனீர், கோப்பி, பியர், சிற்றுண்டி என்பன வாங்கி உண்டு மகிழலாம்.
15.00 கருத்தரங்கு தொடரும்.
16.30 நிகழ்ச்சி முடிவடையும்

எதிர்காலத்தைப் பொறுத்த வரையில் முக்கிய விடயம் என்பதால், பலர் விவாதத்தில் பங்குபற்றுவது விரும்பத்தக்கது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மதிய உணவு வாங்க விரும்புவர்கள் 04-12-1993ற்கு முன்பு சங்கத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com



# நாங்களும் எழுதுவோம்!!! எப்படி?

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதும் முதல் மூவருக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன.

தேர்வு பெறும் முதல் மூவரின் பெயர் விலாசம், பரிசுத் தொகை யாவும் தை மாதத்தில் வெளிவரும் சங்கமத்தில் இடம்பெறும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிசுத் தொகை: 1ம். பரிசு 100.00 kr.
2ம். பரிசு 75.00 kr.
3ம். பரிசு 50.00 kr.

கேள்விகள்:

1. உதைபந்தாட்டம் எந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது?
2. பருவ காலங்;கள் எத்தனை? அவை எவை?
3. 1 வருடத்தில் எத்தனை ராசிகள் உண்டு? அவை எவை?
4. எத்தனை கிரகங்கள்? அவை எவை?
5. ஐம்பெரும் பூதங்கள் எவை?
6. சுவைகள் எத்தனை? அவை எவை?
7. இலங்கைத்தீவு எந்தச சமுத்திரத்தில் உள்ளது?
8. 60வது ஆண்டில் எடுக்கப்படும் விழா எது.
9. ஒரு நூலுக்கு நூலாசிரியரல்லாத பிறர் வழங்கும் புகழுரை எது?
10. புதிதாகச் செய்த தேர் அல்லது கப்பல் போன்றவற்றை முதன்முதலாக செலுத்திப் பார்த்தலை எப்படி அழைப்பர்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

"Sangama mama"
Sangamam
P. O. Boks. 313
7400 Herning



படிப்பகம்

www.padippakam.com



# இன்றைய ஈழப்பெண்

நெல்விதைத்து நீர்பாய்ச்சி
நிறைய கதிரறுத்து
வயல் காட்டு வரம்பினிலே
கழனிபானை தனைச் சுமந்தும்

வண்ண வண்ண சேலை கட்டி
வட்டமாய் கூடி நின்று
தேடிவரும் தென்றலுடன்
தெம்மாங்கு பாடி நின்றும்

கல்லூரிப் படிக்கட்டில்
கவனமாய் அடிபதித்து
கண்ணியத்தை கற்புணர்பை - ஆய
கலைகளுடன் கற்றுணர்ந்து - இன்றைய
ஈழப் பெண்கள் அங்கே
ஏந்தி விட்டாள் துப்பாக்கி
பாதை எல்லாம் கண்ணிவெடி
பரப்பிடவே துணிந்து விட்டாள்

பிணத்தருகே சுற்றி வந்து
புலம்பி அழுத பெண் குலத்தாள்
பிணங்களை புரட்டிவிட
புறப்பட்டுவிட்டாள் களம்நோக்கி

வீரத்தாய் சரித்திரத்தை
வீழ்த்துகின்றாள் ஈழப்பெண்
கண்ணகிபோல்......
கால்சிலம்பை, உடைக்கவில்லை
எதிரியின்
காவலரண் உடைக்கின்றாள்

தொட்டிலை ஆட்டியவள்
தோட்டாவைத் தேடுகின்றாள்
சேலையை மறந்துவிட்டு
சீருடைக்குள் மாறுகின்றாள்

நன்றி
**வேலணையூர் பொன்னண்ணா**

# காதல் கனவு

கன்னி மனதிலே
கற்பனை கொண்டதால்
கண்ணாடி வழியே
காதலனைக் காண்கின்றாள்...

காதலனோ
கன்னி மானின்
கண்களை
கண்கொட்டாமல் காண்கின்றான்

கன்னிமானின்
கண்களிலோ...
கண்ணீர்ப்பூக்கள்
கரை சேர்ப்பான் இவனென்று

காதலனின்
கனவினிலோ
காணி நிலம் இருக்குமா?
கார் இருக்குமா?
கன்னி இவளை கைப்பிடிக்க?

கன்னி மலரோ
கனலாய் மாறியது
கனவு கண்ட
காதலனோ
காற்றில் கலந்தான்

-சிந்து டேவிட் பி. எஸ். சி.

# கல் மனக்காறியவள்

நேற்று அவள் சொன்னாள்
வாழ்தால் உன்னோடுதான்
இல்லையேல்
ஆனால் இன்றோ
வேறு ஒருவனின் மனைவி
இவள் பேச்சைக் கேட்டு
நாயாக அலைகின்றேன்
இறைவா
உனை மட்டும் நான் கண்டால்
உன்னிடம் கேட்பது
ஒன்று மட்டும்தான்
ஆணுக்கும் கல்மனதைக் கொடு
என்று ஏனென்று கேட்காதே
-மோகி, கோணிங்-



படிப்பகம்

www.padippakam.com



# குடியேற்றம் - சமாதானத்திற்கு ஓர் பயமுறுத்தல்

இலங்கை அரசாங்கம், வடக்கு-கிழக்கு குறிப்பாக முல்லைத்திவு, வவுனியா, திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் சிங்கள குடியேற்றங்களை வேகப்படுத்தியுள்ளதாக அண்மைய குறிப்புகள் தெரியப்படுத்துகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மணல்ஆறு குடியேற்றத்திட்டத்தில் 5140 ஏக்கர் காணியில் வைகாசி 1992வரை 3.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. கிட்டத்தட் ட17.000 சிங்களவர் மணல்ஆற்றுத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இக்குறிப்பிட்ட குடியேற்றத்திட்டத்தின் நோக்கமானது, தமிழ்க் குடித்தொகையினை குறைத்து , பாராளுமன்ற பிரதிநிதித்துவம், மற்றும் தேர்வு எண்ணிக்கையினை குறைத்து, வடக்கு-கிழக்கு மாகாணத்திற் கிடையில் ஓர் பிரதேசத்தினை உருவாக்கி தமிழத் தாய்நாட்டினை நிரந்தரமாக பிரிப்பதேயாகும்.

வடக்கு-கிழக்கு மாகாண நிரந்தர இணைப்பினைத் தவிர எவ்வித தீர்வுகளும் தேசிய பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாக அமையாது என ஏழு தமிழ் கட்சிகளும், இலங்கை தொழிலாளர் காங்கிரசும் கூறியுள்ளன. வடக்க-கிழக்கு நிரந்தர இணைப்பிற்கான தமிழர்களின் கோரிக்கையை மிகவும் பிரதானமான கருத்தில் கொள்ளுதல் நாட்டின் தேசிய பிரச்சனையை தீர்ப்பதற்கு வழிவகுக்கும் என முன்னாள் விமானப்படைத் தளபதி கரி குணதிலக கூறியுள்ளார். ஆனால் அரசாங்கம் மணல்ஆற்று குடியேற்றத்தினை தொடர மேலும் அவகாசம் எடுத்துக் கொள்கின்றது. இப்பகுதி சிங்கள குடியேற்றத்தினால் நிரப்பப் பெற்றதும், வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு சாத்தியமில்லை என தமிழர்களுக்கு கூறமுடியும். வடக்கில் யுத்தத்தில், வெற்றியானது இந்நிலையை பலப்படுத்துகின்றது. இது அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் தாமதத்தினை ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பகுதிகளில் 13.000 ஏக்கர் காணிகளில் சிங்களக் குடியேற்றத்திற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எச்சிலம் பத்தை, தெகிவத்தை, தோப்பு, கிளிவெட்டி, சேருவல இப்பகுதியாகும். ஏற்கனவே பெருமளவில் சிங்களவர் இப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளனர். திருகோணமலை நகரத்தில் "நகர் அபிவிருத்தித் திட்டம்"என்னும் பெயரில் சிங்களவர் குடியேற்றப்பட்டுள்ளனர். நிலாவெளி, குச்சவெளி பகுதித் தமிழர் குண்டுத் தாக்குதல், சண்டை, குடியேற்றம் காரணமாக புலம் பெயர்ந்துள்ளனர்.

திருகோணமலைத் துறைமுக முக்கியத்துவம் காரணமாக அரசாங்கத்தில் இத் தந்திர நடவடிக்கைகள் முக்கியத்துவமடைகின்றன. திருகோணமலை முழுவதுமாக சிங்கள நகராக்க அரசாங்கம் நோக்கம் கொண்டுள்ளது. 157, அரச பாதுகாப்புப்படை முகாம்களில் 30.000 படைவீரர் திருகோணமலை, மணல்ஆற்று பகுதிகளில் முகாமிட்டுள்ளனர்.

அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் கிழக்குப்பகுதி திக்மடுவா என சிங்களத்தில் சிலவருடங்களின் முன்னர் பெயர் மாற்றப்பட்டுள்ளது. 1963ல் மட்டக்களப்பு மாவட்ட



படிப்பகம்

## சங்கமம்

டத்தின் கீழ் இருந்த அம்பாறை தீவிர சிங்கள குடியேற்றத்தின்பின் தனி மாவட்டமானது. 1947ல் 2394 சிங்கள வாக்காளர்கள் மட்டுமேயிருந்தனர். ஆனால் 1982ல் 78.378 வாக்காளர்களாக பெருகியது. தற்போது 146.371 சிங்கள சனத்தொகையாக இம்மாவட்டம் கொண்டுள்ளது.

இக்கலப்பு குடியேற்றத்தில் டிக்கவாவி புனித பிரதேசத் திட்டம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. முஸ்லீம் மக்களிடம் இருந்த 10.000 ஏக்கர் காணி இத்திட்டத்தின் பேரில் சிங்களவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. வீட்டுதவி, மாதிரி கிராம அமைப்பு என உதவிகள் வழங்கப் பெற்றன. ஆனால் இவ்வுதவிகள் இம்மாவட்டத்திலுள்ள தமிழ்-முஸ்லீம் மக்களுக்கு மறுக்கப்பட்டுவிட்டது.

அம்பாறையில் 1963ல் 46.4% மாக இருந்த முஸ்லீம் மக்கள் தொகை 1981ல் 41.5%மாக குறைந்தது. அதேபோல் தமிழ் மக்கள் தொகை 23.8%மாக இருந்து 19.9%மாக வீழ்ச்சியடைந்துள்ளது. தமிழ்ப் போராளிகளால் போராட்டத்துக்குள்ளான இப்பகுதியிலிருந்து அகதிகளாக மட்டக்களப்புப் பகுதிகளுக்கு தமிழ்மக்கள் குடிபெயர அவ்விடங்களுக்கு இலங்கை இராணுவ உதவியுடன் சிங்கள குடியேற்றம் நடைபெறுகின்றது.

இப்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன 29 விசேட அதிரடிப் படை முகாம்கள், 5 தரைப்படை முகாம், 1 கடற்படை முகாம், 9 பொலிஸ் நிலையம், 6 சிங்கள சாரணர் படை, 26 முஸ்லீம் சாரணர்படை இயங்குகின்றன.

தமிழ்ப்பகுதிகளில் அரசாங்க அனுசரணையுடன் நடைபெறும் குடியேற்றத்தினை நிறுத்துமாறு கோரும் கோரிக்கை தமிழர்களால் நீண்ட காலமாக விடப்பட்டு வருகின்றது. இது தேசிய ஒற்றுமைக்கு எதிரான பிரச்சனை என 1977ல் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளும், தமிழ்ப் போராட்டக் குழுக்களும் இக் குடியேற்றங்களை எதிர்த்து அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுத்துக் கொண்டிருந்தாலும், தமிழரின் பாதுகாப்புக்கு எவ்வித அபிப்பிராயமும் கருத்துக்கு அனுசரணையும் கொடுக்காமல் அரசாங்கம் தொடர்ந்து இயங்குகின்றது.

நன்றி "T. I. C. London"

www.padippakam.com



# கவிதையினதும், கவிதா ரசனையினதும் மீதான என் பதிப்பு

உதி சபாபதி

சங்கமம் கடைசி இதழில் திரு க. ஆதவன் அவர்கள் தொடராக எழுதும் "கவிதையும் நானும் நீங்களும் கலையும் " தொடருக்கு, கவிதை பற்றிய ஒரு பார்வையினூடு ஒரு ஆரோக்கியமானதொரு முன்பதிப்பை திரு. முல்லையூரான் அவர்கள் எழுதி இருந்தார்.

"கவிதையின் அங்கீகாரம் அல்லது அங்கீகாரிப்பு" பற்றிய இருவருடைய கருத்துக்களும் ஆரோக்கியமானவை. புது இளம் கவியாளர்களிற்கு கற்கைகக்கு உட்படுத்த வேண்டிய விடயம்.

"கவிதை அங்கீகரிப்பு" பற்றிய விவாதங்கள், கலந்துரையாடல்கள், விமர்சன முன்வைப்புக்கள் அவசியமானவை இது ஒரு பெரும் பரப்பை உள்ளடக்கியுள்ளது.

எது கவிதை? என்கிற கேள்வியை முன்வைத்து எம்முன் பலராலும் காலத்திற்கு காலம் முன்வைக்கப்படுகின்ற பேசப்படுகின்ற விடயங்கள் மரபுவழிக்காரர்களிற்கும், புதுக்கவிதையாளர்களிற்கும் காத்திரமான சிந்தனையோட்டத்தை கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. புதுக்கவிதையாளர் கள் பிரவேசங்கள் அதிகரித்து வருகின்ற இன்றைய சூழலில் "கவிதை" பற்றிய ஆரோக்கியமான "சமபந்திப் போசனங்கள் தேவையானவை, அத்தியாவசிய மானவை வரவேற்கக்கூடியவை. "சங்கமம்" அதற்கொரு களத்தை அமைத்துக் கொடுத்திருப்பது மகிழ்வைக் கொடுக்கின்றது.

**"கல்தோன்ற மண்தோண்ற**
**முன்தோன்றிய மூத்த தமிழ்க்குடி"**

என்ற வரிகள் விஞ்ஞான உண்மைக்கு மாறாக, விஞ்ஞான உலகில் வாழுகின்ற எமது சிறார்களுக்கு "சொல்லக்கூடாது" என்ற சமுகப்பிரக்ஞை கொண்ட திரு ஆதவன் அவர்களுடைய சிந்தனைக் கருத்து வரவேற்கக்கூடியதொன்றே. ஆனால் திரு முல்லையூரான் அவர்கள் முன்வைத்த கவித்தன்மை "அங்கீகரிபபு" என்கிற கருத்தை சீர்தூக்கிப் பார்க்கத்தான் வேண்டும்

கவிதையில் கற்பனைகள், புழுகுகள் நிரம்பவே உண்டு. உவமைப்படுத்தப் படுகின்ற பொழுது இன்னும் பெரிதாக்கப்பட்டு கற்பனை மிகைப்படுத்தப்பட்ட தொன்றாக உலாவருகின்றது. கவிதை அழகுக்கு இது தேவைதான்.

ஆனால் பொய்களையே கவிதையாக்குவது, அழகு பார்க்க நினைப்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் அல்ல. திரு ஆதவன் அவர்கள் கூறுவது போல் கட்டுக்கதை வகைக்குள் அடக்க வேண்டியது.



படிப்பகம்

www.padippakam.com

## சங்கமம்

கவிதை வடிவில் உருவம், உள்ளடக்கம் முதன்மை பெறுகின்றது. கொடுக்கப் போகின்ற விடயத்தின் உருவம் மிகைப்படுத்தப்படின், கவிதை தன் உள்வயம் இழந்துவிடுகின்றது. உவமைகள் கையாளப்படும்போதே புழுகுகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இதில் ஆதவன் அவர்கள் கூறுகின்ற உண்மைக்கு மாறான உவமைகள் எத்தகைய தூரத்திற்கு, சிந்தனை மழுங்கடிப்புக்கு எம்மை இட்டுச் செல்லும் என்பது சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டிய விடயம். தமிழின் தொன்மைக்கு உதாரணமாக அல்ல உவமிப்பாக "கல்தோன்றமுன் மண் தோன்றமுன்" தோன்றியது தமிழ்! என்பது விஞ்ஞானபூர்வமாக பிழையான தகவலை எமது சிறார்களிற்கு அளிக்கும் எனக்கூறும் திரு ஆதவன் அவர்கள் கருத்துப் பிழையாகாது.

பிளவ்மோடிவ் ஹானவ் என்கின்ற ருஷ்யர் உருவம், உள்ளடக்கம்பற்றிய தனது கருத்தை;

"அழகு வாய்ந்ததுதான் வடிவம் ஐயமில்லை
கருத்து அதனுள் இருப்பின்,
எழில் கொஞ்சும் நெற்றியால் பயனுண்டோ
கருத்து அதனுள் இல்லையே"

என்ற கேள்வியினூடு கேட்கின்றார், வெறும்வடிவம், அழகு மட்டும் பயன்பாடுடையதாகாது.

திரு. முல்லையூரான் அவர்கள் பதிப்பு "கவிதாரசனை" பற்றியது. அவர் கூறுகின்ற கருத்தும் ஏற்றுக் கொள்ள வேண்டியதே. ரசனை உணர்வு ஒவ்வொரு வருக்கும் வித்தியாசமானது. ஒரு பெண் ஆணைப் பார்த்தோ, ஆண் பெண்ணைப் பார்த்தோ அவன் கண் அழகு, அவள் முக்கழகு, இவன் முக அழகு, அவள் கூந்தல் அழகு எனத் தாம்தாம் தமக்குப் பிடித்ததை ரசிக்கின்றனர். சிலருக்கு உருவம் உள்ளடக்கம் பிடிக்கும். சிலருக்கு ஓசைநயம் பிடிக்கும். சிலர் சொல்லாடல் ரசிப்பர்.

பொய்புரட்டுக் கவிதையானலும் சரி, மெய் உதிர்க்கும் கவிதையானாலும் சி, கவிதாரசனை என்பது இருக்கவே செய்யும்.

பிரச்சனைக்குரிய கேள்வி கவிதையின் பயன்பாடுபற்றியதே கவிதா இலக்கியப் பிரம்மாக்கள் முன்னுள்ள கேள்வி கவிதை எந்தளவிற்கு சமுகப்பயன்பாடுள்ளதாக்கலாம் என்பதே. கவிதாரசனை மட்டத்தை அதிகரிக்கச் செய்ய ஏதாவது செய்ய இயலுமா என்பது பற்றி சிந்திப்பது ஆரோக்கியமானதாகும்.

என் நண்பர் ஒருவர் இலக்கியம்பற்றியோ கதை, கவிதைபற்றியோ கதைத்தால் அறுவை தொடங்கிவிட்டது என்பான். இந்தாளை ஏதும் உருப்படியாகச் செய்யச் சொன்னால் "அலையுது" என அன்பா உபதேசிப்பான். ஒருநாள் என்ன பெரிய கவிதை இதை எழுதுங்கோ. சடுதியாகச் சொன்னான்.

"பக்கத்துவீட்டுப் பார்வதிபோல
வெக்கத்தைவிட்டுப் பாரடி புள்ளே
கண் இருந்தும் பறிபோயிற்று பார்வை
வெட்டவெளியில் - உன் கட்டழகைக்
கண்டபோது"

35ம் பக்கம் பார்க்க



படிப்பகம்

www.padippakam.com



Herning, d. 30. november 1992.

TIL SAMTLIGE FLYGTNINGEGRUPPER OG ANDRE INTERESSEREDE.

Efter den beklagelige aflysning af en konference d. 22. august i år indbyder Dansk-Tamilsk Venskabsforening i Herning endnu en gang repræsentanter for flygtninge af alle nationaliteter i det jysk/fynske område samt andre interesserede til en uformel og uhøjtidelig konference lørdag d. 9. januar 1993 på Lind skole, som er beliggende 3 km syd for Herning.

KONFERENCENS TEMA ER:

## MENNESKERETTIGHEDER I FREMTIDENS EUROPA

Udviklingen i Europa - herunder den øgede vold mod fremmede - gør det stadig mere aktuelt at drøfte hvad man i lokalsamfundet kan gøre for at sikre enhver medborger de fundamentale menneskerettigheder - en menneskeværdig eksistens. Det er ikke gjort med at overlade sagen til politikere og lovgivning alene.

Vi ønsker at give mulighed for en uformel og personlig kontakt mellem enkeltpersoner og grupper, som på forskellig måde har - eller har haft - nær forbindelse til flygtningeforeninger og humanitære organisationer.

Gennem direkte samarbejde og gensidig støtte bliver indsatsen forhåbentlig mere virkningsfuld.

Vi håber, at rigtig mange vil komme til stede og bidrage til en vedkommende og meningsfuld debat om nogle af tidens mest påtrængende og kontroversielle emner.

Tilmelding sker til foreningens adresse senest d. 4. januar 1993.

Program for konferencen vedlægges.

Med venlig hilsen.

Selvakumar T.

Thorbjørn Lorentzen



படிப்பகம்

www.padippakam.com



**Program for konferencen i Herning om menneskerettigheder i fremtidens Europa, lørdag d. 9. januar 1993.**

Kl. 11.30 Velkomst og indledning.

12.00 En let frokost for kun 30 kr. Drikkevarer kan købes.

13.00 Debatoplæg ved 1) generalsekretær Arne Piel Christensen, Dansk Flygtningehjælp,

2) cand.jur. Morten Kjærum, leder af Det Danske Center for Menneskerettigheder,

3) antropolog, dr.phil. Ann Belinda Steen, Det Dansk Center for Menneskerettigheder,

Vi forventer desuden deltagelse af et eller to medlemmer af Folketinget, som har været aktive til fordel for flygtninge. Efter de korte oplæg er der åben og uformel debat.

14.30 PAUSE. Der serveres kaffe og te. Øl og vand kan købes.

15.00 Debatten fortsætter så længe der er behov. Herefter friere samvær og meningsudveksling med mulighed for at skabe nye og nyttige kontakter.

16.30 Afslutning.

**Vis programmet og indbydelsen til dine venner og bekendte, som måske kunne have lyst til at deltage.**

**VEL MØDT I HERNING 9. JANUAR.**



படிப்பகம்

www.padippakam.com



பிரான்சின் தேர்தல் முடிவு ஐரோப்பிய இணைப்பில் புதிய சகாப்தம்

# டென்மார்க்கில் அரசியல் நெருக்கடிகள் அதிகரிப்பு

-குகன்-

ஐரோப்பிய இணைப்புக்கான பிரான்சின் தேர்தல் முடிவுகள் சாதகமாக அமைந்ததை தொடர்ந்து இணைப்புக்கான முயற்சிகள் மேலும் பலமடையத் தொடங்கியுள்ளன. இருந்தும் பிரான்சின் 48%மான வாக்காளர்கள் தமது பலமான எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் விவசாயிகள் ஆவர். இணைப்புக்கான யாப்பில் விவசாய உற்பத்தி வளர்ச்சிக்கான எந்தவொரு சாராம்சமும் இடம்பெறவில்லையென்பதே இவர்களது குற்றச்சாட்டு. இதே நிலமைதான் டென்மார்க்கில் மட்டுமல்ல ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் எழுந்தது. விவசாய உற்பத்திச் சாதனங்களுக்கும் ஏனைய தொழிற்றுறை உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையே எழுந்துள்ள போட்டியே இவ்விணைப்பின் முக்கிய சாராம்சம் எனப் பல அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இப்போட்டியில் விவசாய உற்பத்தித்துறை இரண்டாந்தர பிரஜையாக ஆக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏனைய தொழிற் றுறை உற்பத்திச் சாதனம் தனது பலமாக ஆக்கிரமிப்பை மேலும் பலப்படுத்தி யுள்ளது. இம் மனக்குமுறல்கள் காரணமாகவே விவசாயிகள் தொடர்ந்தும் பல்வேறு வழிகளில் தமது பலமான எதிர்ப்பை அரசுக்கு தெரிவித்து வருகின்றனர். பிரான் சின் விவசாயிகள் சரித்திரம் ஒரு தனிக்கதை.

பிரான்சின் தேர்தலைத் தொடர்ந்து இங்கிலாந்தில் அரசியற் கட்சிகள் மட்டத்தில் மீண்டும் ஒரு பூகம்பம் கிளம்பியது. எதிர்க்கட்சிகள், அரசாங்கம் ஐரோப்பிய இணைப்பில் தன்னிச்சையாக நடப்பதாக ஒரு குற்றச்சாட்டை சுமத்தி கட்சிகள் மட்டத்தில் புதியதொரு வாக்கெடுப்பை தொடங்கினர். இம்முயற்சியும் தோல்வியைத் தழுவியது. பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர், டென்மார்க் அரசின் சந்திப்புக்களை தொடர்ந்து கருணை மனுவொன்றினை ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு விடுத் திருந்தார். ஜேர்மனிய அரசும், பிரான்சு அரசும் இணைப்பு சட்டதிட்டங்களை மீண்டும் பரிசீலனை செய்வதை முற்றாக மறுத்தனர். இதனால் டென்மார்க் அரசியல் மட்டத்தில் மீண்டும் நெருக்கடிகள் வளர ஆரம்பித்துள்ளன. டென்மார்க் பிரதமர், வெளிநாட்டமைச்சர் இருவரும் தமது பிரயத்தனத்தை வெகுவாக ஆரம்பித்த பொழுதும் பயன் கிடைக்காததைத் தொடர்ந்து டென்மார்க்கில் புதியதொரு ஐரோப்பிய இணைப்புக்கான தேர்தலை நடாத்த கருத்துக்கள் வெளியிட்டபோது மீண்டும் கட்சிகள் மட்டத்தில் முரண்பாடுகள் வெளிவர ஆரம்பித்தன.

ஐரோப்பிய சங்கத்திற்கான புதிய தலைவர் நியமனம் வரும் புதிய ஆண்டில் ஏற்படவுள்ளது. இபபதவிக்கான தகுதியை டென்மார்க் நாட்டுக்கு வழங்குவதாக தெரிவித்திருக்கிறார்கள் ஐரோப்பிய தலைவர்கள். "இப்பதவிப் பொறுப்பை நாம் வகிப்பதானால் ஐரோப்பிய சங்கத்தில் இணைவதை சாத்தியமாக்க வேண்டும்", என்பது டென்மார்க் பிரதமர், வெளிநாட்டமைச்சரின் கருத்து. ஐரோப்பிய இணைப்புக்கான சாராம்சங்களில் மாற்றம் செய்து பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு விடயங்களில் கூடிய கவனம் செலுத்துவதாக இருந்தால் நாம் ஏற்றுக் கொள்கின்றோம் என்பது எதிர் தரப்பினரின் வாதம். இந்த சூழ்நிலைகளில் அரசாங்கத்திற்கு அச்சுறுத்தும் வகையிலான இரண்டு வழக்குகள் உயர்நீதிமன்றுவில்



படிப்பகம்

www.padippakam.com



பரிசீலிக்கப்பட்டது அனைவருக்கும் தெரிந்ததே. இவ்வழக்குகளில் ஒன்று தமிழர் குடும்ப இணைப்பு விவகாரம் மற்றது அம்பி விவகாரம். தமிழர் வழக்கு தீர்ப்பு வழங்குவது நீடிக்கப்பட்டு வருகின்றது. இவ்வழக்குகள் மூலம் அரசாங்கம் தனது பதவியை துறக்க நேரிடலாம் என்கிற வாதமும் உண்டு. இதனால் புதிய தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

இத்தகைய நெருக்கடிகள் மத்தியில் நீதி ஆணைக்குழு அறிக்கை தொர்பாக வரி இலாக மந்திரி தனது பதவியை இராஜினாமா செய்து கொண்டதோடு அரச தரப்பினர் அனைவர் மீதும் குற்றம் சுமத்தினார். நீண்ட காலமாக அரசின் உயர்மட்டத்தில் பெரும் ஆதரவு பெற்றவரும் இன்றுள்ள வலதுசாரி அரசுக்கு பெரும் உறுதுணையாக இருந்தவருமான இவ் அமைச்சா அரசுக்கு பெரும் தலையிடியை கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் புதிய ஆண்டு டென்மார்க் அரசியலில் பெரும் திருப்பங்கள் ஏற்படலாம் எனக் கணிப்பிடப்படுகின்றது.

தொடர் வளர்ச்சியை அடுத்த இதழில் பார்ப்போம்.........

32ம் பக்கத் தொடர்ச்சி

## கவிதையினதும் கவிதாரசனையினதும்.....

இதை மிகவும் ரசித்தேன் அவன் மனதுள் பதிந்த கவிதா நிகழ்வை ரசித்தேன் ருசித்தேன்.

திருவாளர்கள் ஆதவன், முல்லையூரான் அவர்கள் கருத்துவீச்சுக்கள் பயன்பாடுடையவை.

கவிதையின் பயன்பாட்டை அகப்புறச்சூழலில் அறியத்தூண்டுபவை.

**எமது ரசனை தரமிக்கதா? இல்லையா?**
**உண்மையான கவிதை எது?**
**கவிதையின் பயன்பாடு எத்தகையது?**

அவசியமாக விவாதிக்கப்படவேண்டிய, மேலும் மேலும் கதைக்கப்பட வேண்டியதொன்றாகும். ஆரோக்கியத்திற்கு உகந்தது.

நன்றி



படிப்பகம்

www.padippakam.com



# இளநீர் இளம் விழிகள்

முல்லையூரான



## இளவேனிற்காலம்

என் வீட்டு முற்றத்துச் சிதம்பரத்தை
கிளை வளையப் பூத்திருக்கும்.
முலையடி வேம்பும் புதிய துளிர்களுடன்
காற்றில் கலையாடும்.
சோகங்களையெல்லாம் வாரிச்சுருட்டி
சமுத்திரத்தில் எறியென்று
சோக்கான அந்த சோழகக்காற்று..........சொல்லிச் சொல்லி....
சின்னக் குழந்தையாய் புழுதிகளில் விளையாடும்.

உச்சி மரஙகளில் கீச்சிடுமணில்களும்,
முற்றப்புழுதியில் கிந்திவிளையாடும் புலுணிக்குருவிகளும்,
கறுத்தைக்கொழும்பான் மாம்பழ மரங்களில்
மறைந்து சுவைக்கும் மாம்பழக்குருவிகளும்,
பலாப்பழ வாசனை தேடி
அலகு துளைக்கும் நமது காக்கைகளும்
நிறைந்த என் வீட்டுக் கிழுவை வேலிகளில்
பிலாக்கொட்டைக் குருவிகள் தத்தி விளையாடும்.

இப்படியாமொரு இளவேனிற் காலத்தில்
என் ஈழத்தங்கை "சுதந்திரா" பிறந்தாளென்று
பறந்து பறந்து பச்சைக்கிளிகள்
நீள வான நிறை சேதி சொல்லும்.



படிப்பகம்

## சங்கமம்

கக்கறுந்து ஓரோலை கீழே வீழ
புதிய பனங் குருத்தென்று
வாள்போல் வானத்திடை நீளும்.
இப்படியாமொரு இளவேனிற்காலத்தில்
என் ஈழ தங்கை "சுதந்திரா" பிறந்தாளென்று-
முற்றத்துச் சிதம்பரத்தை
கிளைவளையப் பூத்திருக்கும்.

சின்ன முகமதில்
இளநீர் இளம் விழிகள்.
சீறிக் கொப்பளித்த சொக்கு.
சொல்லாத அவளின் சிறுசிரிப்பு.
காற்றில் உயரும் பழம் கடதாசியாய்
வாழ உயிர் வேண்டி வறுகையில் நான் கொண்டு வந்த
புகைப்படத்தில்,
இப்படித்தான் இச்சிறுமி,
இருந்தாளய்யா......!

### பின்பனிக்காலம்

பின் பொரு நாள்
பின்பனிக் காலமொன்றில்
சுதந்திராவின் இன்னொரு புகைப்படம்,
உறவுப்பால கடதாசிக்கல்லாய்
வடதுருவக் கறுப்புக் களிசறையெனக்கு
வந்து சேர்ந்தது.
சுருங்கிய குரும்பட்டியாய்
முகமது மாறி_அவளின்
இளநீர் இளம் விழிகள்
வன்னிக் கிணறுகளாய் ஆழமாய்,
பங்குனிவெயிலில் வற்றிய நந்திக்கடலாய்
காய்ந்து கல்லாகி விழாம்பழக் கோதாக...

www.padippakam.com



வரண்ட சொக்குகளாய்
எலும்புகள் தள்ளி துப்பாக்கி வில்லாய்
இளமையில் முதுமையாய் -ஐயோ
எங்கே -அந்த
சொல்லாத அவளின் சிரிப்பு?
எம் மணலிற் தொலைந்து
எக்காற்றிற் கரைந்திற்று!

கிளை வளையப் பூத்திருந்த-அதே
முற்றத்துச் சிரம்பரத்தை முன்னாற்தான் அவளிப்போ...
கிளை வளையப் பூவில்லை,
உள்ள சில வறிய பூக்களும் வாடி வதங்கிட
இளநீர் இளம் விழிகள் இறந்து
அழுக்கோடான கறுப்புக்கால்களுடன்
வண்டடித்த இளந்தென்னங்கன்றாய்
தலைமயிர் சிந்திக் குழம்பி
பதுங்கு குழிகளின் பயம் வரைந்த முகத்தொடு
போர் விமானங்களுக்கு ஒதுங்கி மண்முத்தமிட்டு உதட்டினளாய்
என்தங்கை "சுதந்திரா"
தன்நிலத்தில் அகதியாய் ஆனாளய்யா!!

## கோடை

நல்ல வெளிச்சம்.
காற்றுக்காக திறந்த கதவுகள்.
புல் வெட்டிச் செப்பனிடும் ஒரு சனி விடுமுறையில்
இயந்திர இரைச்சலிடை மது வாங்கி விரைவானொருவன்.
கார் கழுவிக் காயவிடும் காறினின் கணவனும்
இன்றுதான் களைப்பாறும் பாவம்



படிப்பகம்

## சங்கமம்

நல்ல வெளிச்சம்
காற்றுக்காக திறந்த கதவுகள்.
குருதியுடன் கலவாத பாலாய்
தூர ஒரு இரவற் தேசியக் கொடி காற்றிற் பறக்கும்.
நல்ல வெளிச்சம் காற்றுக்காக திறந்த கதவுகள்.
சூரிய மழையில் குழிக்கும்
ஆடை துறந்த செவ்விழநீர் மார்பகங்கள் -ஆமவளென்
பக்கத்து வீட்டு பேோட்டாவை
வேலியிடுக்கால் விருந்துண்ண -என்
சிற்றின்பப் பனங்காய் விழிகள் கடந்தபோது
தபாற்காரன் தந்த கடிதத்துள் -என்
தங்கை "சுதந்திரா" வின் படமொன்றிருந்தது.

கொடு வெயில் தாங்க முடியாமல்
செத்துக் கிடந்தது -அந்த
முற்றத்துச் சிதம்பரத்தை.அதன்முன்னே
சுதந்திரா -ஐயோ
செத்து நின்றனள்.

கல்லில் விழுந்த நாவற்பழமென
இளநீர் இளம் விழிகள் நசிந்து/பிதுங்கி
கண் குழி மட்டும் கறுப்பாய் இருந்தது.

செல்விழுந்து இளநீர் இளம்விழிகள் இறந்தனவோ
செருக்கர் அதைத்தோண்டி உண்டனரோ
என் ஈழத் தமிழ் தங்கை "சுதந்திரா"வின்
இளநீர் இளம் விழிகள் இறந்தனவென்றோ
செத்துக் கிடக்கிறது -என்வீட்டு
முற்றத்துச் சிதம்பரத்தை.

முற்றும்.

www.padippakam.com



# சி.க. ராசா அவர்களிற்கு, எஸ். பாஸ்கரன் எழுதும் கடிதம்.

சங்கமம் 18வது இதழில் வெளியாகிய தங்களின் ஒற்றுமை மற்றும் புளொட் சித்தார்த்தன் பற்றிய கருத்துக்களையும் அறிந்தேன். தங்களிற்கும் தங்களின்-பெயரின் பின்னால் இருந்து கொண்டு இக்கருத்துக்களையும் கொண்டவர்க்கும் இக்கட்டுரை சுருக்கமான விடையாக அமையும் என நம்புகின்றேன்.

தமிழரின் வரலாறு தொடங்கும் போதே துரோகிகளின் அத்தியாயமும் அத்துடன் தொடங்குகின்றது என்பது கசப்பான உண்மையாகும். போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய காலணித்துவ காலத்தில் காக்கைவன்னியர் கூட்டமும், இந்திய ஆக்கிரமிப்பு காலத்தில் வரதராஜப் பெருமாள், பத்மநாபா கூட்டமும் தற்போது சிங்களப் பேரினவாதத்துடன் சேர்ந்து தமிழின அழிப்பின் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் கும்பலும், டக்ளஸ் தேவானந்த தலைமையிலான கும்பலும் இன்னும் பல உதிரிகளான கும்பல்களும் சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து செயறபடுகின்றார்கள், என்பது தமிழ் மக்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். உதாரணமாக மாலைதீவு சதிப்புரட்சிக்குச் சென்று கைதான புளொட் உறுப்பினர்கள் பின்னர் இலங்கை அனுப்பப்பட்டு சிங்கள் இராணுவததுடன் பணியாற்றுவது பத்திரிகைகளில் வந்த விடயமாகும்.

தமிழீழம்தான் தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு என்பதனை 1977ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் மூலம் மக்கள் அங்கீகரித்துவிட்டார்கள். அண்மையில் டென்மார்க்கிற்கு மேற்றணியார் டி. ஜே. அம்பலவாணர் வருகை தந்திருந்தார் அவர்கள், மக்கள் தாங்களே தங்களை ஆளும் தீர்வினைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் மக்கள் ஏற்கும் நிலையில் இல்லை என்றும், முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களின் பின்னர் ஒன்றிணைந்த நாடுகள் இன்று பிரிந்து செல்கின்றன என்றும் பத்திகைகளுக்குத் தெரிவித்திருந்தார்..

தமிழீழத்தில் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் சிங்கள் அரச பயங்கரவாதத்தை எதிர்த்துப் பல்வேறு இயக்கங்களாகத் தோற்றம் பெற்றது. தமழீழ ஆயுதப் போராட்டத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் தியாகி. பொ. சிவகுமாரன் ஆகும். பெயர் கொண்டதும் பெயர் இல்லாததுமாக சுமார் 30 இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இப்போரட்டக் குழுக்கள் பல, கால ஓட்டத்தில் மக்கள் ஆதரவு இன்றி வந்த இடம் தெரியாமல் போயின. இவைகளைத் தவிர தோற்றம் பெற்ற ஆயுதக்குழுவின ருக்கு இந்தியரசு உதவியதோடு இந்திய மண்ணில் தளங்கள் அமைத்து வளர்வதற்கு உதவியது. இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்கள் பேணப்படும் என்ற நோக்கில் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டமையும்., இந்திய மேலாதிக்கத்தை ஏற்க மறுத்த விடுதலைப்புலிகள் இயக்கத்தை மற்றைய இயக்கங்களின் உதவியுடன் துணையுடன் இந்தியா அழிக்க முயன்றதும் இறுதியில் அம்முயற்சி கைகூடாமல் போனபோது இந்திய-விடுதலைப் புலிகள் யுத்தம் வெடித்ததும் மக்கள் யாவருக்கும் தெரிந்த விடயம். தமிழீழ விடுதலையை ஆரம்பித்த காலத்தில் திரைமறைவில் இருந்து எதிர்த்தசக்திகள் இன்று நாம் பார்க்கவேண்டிய விடயம் யாதெனில் தமிழீழ மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் புறப்பட்ட ஆயுதக்குழுக்கள் இன்று போராட்டம் கூர்மை அடைந்ததும் பகிரங்கமாக எதர்க்கத் தொடங்கியுள்ளன. இன்று எதிரியுடன் கைகோர்த்து நிற்பதை நாம் தெளிவாகத் காண்கின்றோம். அணைமையில் இந்தியாவிற்கு விஜயம் செய்த பிரேமதாசா தமிழீழ விடுதலை என்று போரிட்ட எட்டு இயக்கங்களுள் ஏழு இயக்கங்கள் இன்று தமது அரசுடன் சேர்ந்து செயற்படுகின்றன என்று பத்திகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போது குறிப்பிட்டுள்ளார்.



படிப்பகம்

## சங்கமம்

இன்று உதரிகளாக சிறு சிறு குழுக்களாக உள்ள டக்ளஸ் தேவானந்தா குழு, பிரேமச்சந்திரா குழு, சிறிகந்தா செல்வம் குழு, உமா மகேஸ்வரனின் கொலைக்குப் பின்னர் தன்னைப் புளொட் தலைவராக அறிவித்துக் கொண்ட சித்தார்த்தன் குழு என்பன சிங்களப் பேரினவாதத்துடன் சேர்ந்து இயங்குகின்றன. இந்திய ஆக்கிரப்மிபின்போது நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில்கூட சித்தார்த்தனது புளொட் இயக்கம் மக்களால் நிராகரிக்கப்பட்டது என்பதனை சி. க. ராஜா அறிந்திருப்பார் என நினைக்கின்றேன். லண்டனில் கணக்காளராக இருந்த சித்தார்த்தன் 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் கணக்காளர் வேலையை விடுத்து முழுநேரமாக மக்களின் துயர் துடைக்கச் சென்றதாக சி. க. ராஜா எழுதியிருந்தார். இன்று சிங்கள அரசு வடபகுதி மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ளது. மக்கள் இன்று ஒருவேளை நேர உணவு உண்பதே கேள்விக் குறியாக உள்ள நிலைமை. குழந்தைகளின் பால் மா, போலியோ தடுப்பு மருந்து வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வடபகுதிக்குச் செல்லாதவாறு தாண்டிக் குளம் தடைமுகாமில் நின்றுகொண்டு சிங்களப் படைகளுடன் சேர்ந்து தடை செய்வதே சித்தார்த்தனது புளொட் குழுவினரின் முக்கிய வேலையாக உள்ளது.

பாலஸ்தீனத்தில் உள்ளது போன்று போராட்டச் சூழல் எம்மண்ணில் இல்லை. இன்று பாலஸ்தீனம் முழுவதும் ஆக்கரமிக்கப்பட்டு, பாலஸ்தீன விடுதலை இயக்கம் P L. O. இன்று தனது சொந்த நாட்டில் தளத்தை இழந்துள்ளது. ஆனால் ஈழப் போராட்டத்தில் தமிழீழத்தின் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு, Defacto அரசு அமைக்கப்பட்டு சிவில் நிர்வாகம் 4000 ஆண்டுகளின் பின்னர் தமிழரின் கையில் வந்துள்ளது. இந்த அரசை மாறிவரும் சர்வதேச சூழலுக்கு இணங்க வெளிநாடுகள் அங்கீகரித்துவிடுமோ என சிங்கள அரசு அஞ்சுகின்றது. இதற்கு இரண்டு வழிகளை கையாள்கின்றது. ஒன்று தமிழீழ பூமியை ஆக்கரமித்து சிங்கள குடியேற்றங்கள் நிறுதன் மூலம். இதற்கு இரானுவத்துடன் சேர்ந்து துரோகக் குழுக்கள் வழிகாட்டியாகப் பணி புரிகின்றன. இரண்டாவது, வெளிநாடுகள் தமிழீழத்தை அங்கீகரிக்காத வண்ணம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் செய்வது, இதற்குச் சித்தார்த்தன் குழுக்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றது.

ஒற்றுமை என்பது நல்ல விடயம், இன்று தமிழீ இலட்சியத்தைக் கைவிட்டு சிங்கள மேலாதிக்கமான ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு, சிங்கள அரச படைகளுக்குத் துணையாக தமிழீழத்தை ஆக்கிரமிக்கும் சக்திகளுக்கு வழிகாட்டி யாகச் செயற்படுபவர்களுடன் எந்த ரீதியில் ஒற்றுமையாகச் செயற்படமுடியும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்? பாரிய படையெடுப்பின் மூலம் எதிரி சாதிக்க முடியா ததை துரோகி ஒருவன் சாதித்துவிடுவான் என்பதனை நீங்கள் அறிந்திருப்பது நல்லது.

இறுதியாக ஒன்று சொல்ல விரும்புகின்றேன். இன்று தாய், தந்தையரை இழந்து பாலிற்காக ஏங்கியளும் நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கொண்டதும், பட்டினியால் வாடும் மக்களைக் கொண்டதுமான எமது தாயகத்தில்தான் எமது தாய், தந்தையர், சகோதரர், உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்கின்றார்கள். இந்நாட்டில இருந்து புலம் பெயர்ந்தவர்கள் நாங்கள். இங்குள்ள வசதிகளைக் கண்டதும் நாட்டை மறந்து நலமாக நீங்கள் இருக்கலாம். ஆனால் எல்லோரும் உங்களைப் போல் இல்லை. மேலும் உங்கள் கருத்துக்களை எழுதும்போது உங்கள் முகவரியையும் தாருங்கள். கருத்துக்களை நேரடியாகப் பரிமாற வாய்ப்பாக அமையும். முகவரி இல்லாத கருத்துக்களைப் பிரசுரிப்பது சங்கமத்தின் வளத்திற்கு நல்லதல்ல.

www.padippakam.com



அட்டைப்பட விளக்கம்

# நூற்றாண்டுத்தவம்

பகல் துறவு பூண்டு
இருளாடை போர்த்துக்கொண்டிருக்கும்
மின்மினிகளும்
நட்சத்திரங்களும்
கண்சிமிட்டி காதல் விளையாடும்
அந்த இரவில்
எலும்புகளைக்கூடி
குளிர்தேடிச் சென்று
குசலம் விசாரிக்கும்
கொடும் குளிர் காலத்தில்...

வானெங்கும் பூசசொரிய
வண்ண வண்ண தேவதைகள்
வலம் வந்து மலர் தூவ
மரியின் மடியில்
மண்ணுக்கு வந்த
மனுக்குமரனே
மீண்டும் உம் பிறப்பு இனி எப்போ?

இங்கே
ஒரு பூமி
உன ஜனனத்துக்காய்
வான் நோக்கி
விழி திறந்து நிற்கின்றது
இந்த நூற்றாண்டுத்தவம்
இன்னும் எத்தனை
காலம் வரை...?
இயேசுவே,
மீண்டும் உம் பிறப்பு இனி எப்போ?

எங்கள் தலைவிதியை
எழுத-எம் தலைமேல்
சடசடக்கும் இரும்புப் பறவைகள்
இனிமேல் அபிவிருத்திக்காகப் மட்டும்
பறக்கப் போவது
இனி எப்போ?

தரைதேடி வந்து
மோதும் அலைமீது
நம் தமிழர் சதைகளும்
எலும்புகளும் மிதக்காமல்
நுரை மட்டும் மிதக்கும்
காலம் எப்போ வரும்....?

குண்டு கக்கி
உயிர் குடிக்கும்
பீரங்கிக் குழாய்களெல்லாம்
நீர் ஓடும் குழாய்களாய்
பாரடியில் புதையும்
நேரம் இனி வருமா...?
பூப்பாரம் தாங்காது
பூமி நோக்கி
தலைசாயும் ரோசாச
செடிக்கு
ஆதாரமாய் துப்பாக்கி
குத்தி வைக்கும்
காலம் இனி எப்போ வரும்?

முத்து, ரோணிங்

# பிணவாடை

முக்காடு போட்டு முழுநிலவும்
முகம் சுழித்து மறைகிறது
காலைக்கதிரவனின் கதிர் வீச்சும்
கணப் பொழுதில் கருகிவிட்டது

மாங்கனித்தீவின் மலைச்சாரலும்
சுற்றியோடும் இந்த நதியும்
பாடித் திரியும் பறவைகளும்
கூடிநின்று ஒப்பாரி வைக்கின்றன

வசம் கொள்ளும் வண்ணப்பூக்களும்
வாசம் தர மறுக்கின்றன
சந்திரரைக் காதல் கொண்ட
கார்முட்டங்களும்
மழை தராது கலைந்துவிட்டன

ஏன்

வளம் மாறி வளம் மாறி
அடி படும் ஈழத் தமிழா
உன்மேல் வீசும்
**பிணவாடையினால**

-யே. டகளஸ்-



படிப்பகம்

www.padippakam.com



# கல்வியில் இங்குமோர் அகதி

தேடி வந்தோம் ஓர் நாட்டை அது அழகு தமிழ்
      பாடி வரும் நதிகள் மலைகொண்ட பாரத நாடாகும்
அங்கே பாவியவர்கள் பழி சொல்லி பார்த்து பின்நாளில்
      பேசிப் பார்த்தும் இயலாமல எமை பிறர் என்று ஏசிவிட்டார்
வேள்வியதில் நிற்கும் வெட்டாடு போலானோம் தமிழர் நாம்
      நம நாட்டில் விதையற்ற புலவானோம இங்குதான் அகதி
ஓடி வந்த இன்னாட்டில நாமொன்றும் அடிமையில்லை -ஆனால்
      உண்மையுள்ள ஒரு அகதியாய் இந்நாட்டில் வாழ்கின்றோம்
தமிழரென சொன்னாலும் அடிதான் அங்கே - உங்களுடன்
      வரவா எனக் கேட்டாலும உதைதான் வாழ்க்கையெல்லாம்
ஏனிந்த அவலநிலை எமக்கொன்றும் புரியவில்லை - இப்புவியினில்
      நாம் செய்த பாவம் என்ன? இனி என்நாள் தான் தீருமோ.

அம்மா என நினைத்து அகதியாய பாரதம் வந்தோம் - இஙகு
      மகவே என அழைப்பார் என மனதில் ஓர் ஆசை கொண்டோம்
வீண வேலைதான் நாம வநது விழுந்த இடம் - உணமை இஙகு
      தாம உண்டு என எம சகோதரா நினைக்கின்றார்கள் என் செயய
அள்ளி எமை அணைக்க வேண்டாம எம் அருமை இந்தியரே
      கிள்ளியேனும் எறியாதீர் எம் சீழ்பட்ட உள் உணர்வை
பள்ளி செல்லும் சிறுவர் தான் நாம் பரவாயிலலை வீணை பள்ளி கொள்ளோம்
      எமககு பாடம் படிக்க ஓர் இடம் நேசத்துடன் தாரீர்
கண்டோர்கள் மதிக்க எமமிடத்தில் எதுவுமில்லைத்தான் - ஆனால்
      திரைக் கல்விதான் நாம் பெற்ற சீதனமாம் புரிவீர்
அழிந்து போவோம இன்றிருப்போர் உண்மை ஆனால் - நாளை
      அழியா இடம் பிடிப்போம் பின் நீருணர்வீர் உன் செயலை
சாதனைகள மாறலாம உலகில் சாஸ்திரங்கள் அழியலாம் - இன்னும்
      வேதனையில நாம் துவழ்வது வெளிவரும் பின் சரித்திரத்தில் பார்ப்பாய்
கோபம இல்லை கொஞ்ச நேரம் ஒதுக்கிவிட்டு சிந்தியுங்கள்
      பாவம் அங்கே பழி இஙகே எனப் புரியும்

நாம் படித்தோம் உம்நாட்டில் அன்று மன்னன் - பார்
      தன் தேரை கொடுத்தானாம் சிறு படர் கொடிக்கு உண்மையா?
உயிரற்ற ஜீவனுக்கு உதவி செயதாய் அன்று - நாம் இன்று
      உயிர் வேண்டும் என்கின்றோம் உதவி கொள்ள வாராயோ
என தமிழா நீயென்ன இந்திய எண்ணிக்கையில் ஒன்றை கூட்டவா
      கூன் விழுந்து நரையாலும் நாம் என்றும் தமிழன்தான்
இருள் நேரம வருகின்றது எமக்கெல்லாம் சந்தோசம் - ஏன் சொல்
      மறுநாளொன்று பகலாக வருமென்று நாம் எண்ணி வாழ்கின்றோம்
ஈழத்திலே எமக்கெல்லாம் இடமில்லை எதற்கு? கலவிகொள்
      இந்தியாவிற்கு நாம் வந்தோம் இங்கும் இனக் குரோதமா?
இனி நாஙகள் வரமாட்டோம் வேறெங்கும் போகமாட்டோம்
      இயன்றால் இழகிவிடு இலலையெனில் ஏற்றி துரத்திவிடு

-கரவையூர் சந்திரன்-



படிப்பகம்

www.padippakam.com



# மாசுபடுத்தாதீர்கள்

இன்று தமிழீழமண் ஒரு மாபெரும் திருப்புமுனையில் வெற்றிநடை போடுகின்றது. மகத்தான ஒரு காவியம் ரத்தத்தால வரையப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குருதி தோயந்த அன்னிய சிறீலங்கா இராணுவப் பாதங்களை தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குலத்திலிருந்தும் வெளியேற்ற தமிழீழத்தின் அனைத்து வளங்களும், சக்திகளும் பயன்படுத்தப்படுகின்றன. உலகின் திசைகளெல்லாம் எழுந்துநின்று கொழுந்துவிட்டெரியும் தமிழீழ விடுதலை யுத்தத்தை கூர்ந்து நோக்கத் தொடங்கிவிட்டனர். இந்தநிலையில் சர்வதேச இணக்கம் அல்லது உலக சமூகநிலை என்ற ஒரு நிலைப்பாடு தமிழீழ போரட்டத்துக்கு ஆதரவாக உருவாக்க வேண்டிய இந்நிலையில் முயற்சிகள், உழைப்புக்கள் எல்லாம் ஒரு சங்கத்தின் பதவிகளை கைப்பற்றுவதில் செலவிடுவது விளலுக்கு இறைக்கும் நீர் போன்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ தேசியத்தின மொத்த வடிவாமாக இன்று உருவெடுத்துள்ள இந்த நேரத்தில் டென்மார்க்கில் இயங்காத ஒரு அமைப்பு இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாக காரணம்கூறி விடுதலைப் புலிகளின் பெயரைக்கூறி தாமும் தேர்தலில் நிற்பதை சிலர் நியாயப்படுத்துகின்றார்கள். சங்கமொன்றின் பதவி நாற்காலிகளை கைப்பற்றுவதற்கா க காலில் செருப்புமின்றி, உடுத்திட சாரமுமமின்றி உயிர்கொடுத்துப் போரடும் அந்தப் பெடியளின் பெயரைப் பாவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தமிழ் மக்களின் எழுச்சியின் வடிவமான தமிழீழ விடுதலைப் புலிகளின் புனிதத் தன்மையும், உறுதியையும் கேவலப்படுத்துவதுபோல் சங்கத் தேர்தல்களில் அவர்களின் புனிதமான பெயரை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வது அந்த அமைப்புக்கு செய்யும் பெரிய உதவியாக இருக்கும். தமிழீழத்தில் நடைபெறும் அந்த உன்னதமான போராட்டத்துக்குகாக களத்தில் நின்று ஒரு துரும்பையேனும் தூக்கிப் போடாதவர்கள் எல்லாம் என்ன மனத்துடன் அந்த இயக்கத்தின் பெயரை பதவிகளுக்காகப் பாவிக்கின்றார்களோ தெரியவில்லை.

இவர்களின் இந்தச் செயலைப் பார்க்கும்போது அண்மையில் விழா ஒன்றில் வாசிக்கப்பட என்னுடைய கவிதை வரிகள்தான் வருகின்றன.

இது நான்கு மணித்துளி
பின்னால் உள்ள துருவதேசம்
இங்கு உண்மைகூட
பொய்யின் பின்னால்தான வரும்
பொய் பட்டாடை கட்டி
பாதணி மாட்டி
குஞ்சரக் குடை பிடித்து
ஒய்யாரமாய் நடக்கையில்
உண்மை ஒரு ஓரமாய் - ஆனால்
உண்மையாக இருக்கும்.

-முத்து, கோர்ணிங்-



படிப்பகம்

## சங்கமம்



துரைசிங்கம் வேணுகா
05-11-92



டனுசியா அன்னலிங்கம்
08-12-92



விந்துராஜ் ரெட்ணகுமார்
25-11-84



பிரதீப் குகன்
12-11-1990



தரிசன் தேவதாஸ்
06-12-90

www.padippakam.com

POSTBESØRGET AVIS

7400 HR 58599

CHANCHIVB

Tamilsk Dansk Venskabsforening

Danmarksgade 10

7500 Holstebro



Dansk-Tamilsk Venskabsforening
டெனிஸ் தமிழ் தோழமை ஒன்றியம்
Danish Tamil Friendship Association
PO Box 313 . DK-7400 Herning . Tel. 97 12 55 93 . Giro no. 7 84 59 52



படிப்பகம்